மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

இல்லம் : 10 சுற்றம் : 3 / மார்ச்சு 2020 / ஆசிரியர் : விசவனூர் **வே.தளபதி** / விலை : ரூ.10/-



## கொரோனா வைரஸ்

### அச்சத்திலிருந்து விடுபட சில வழிகாட்டுதல்கள்




அந்நியர்களாக்கப்படும் இந்தியர்கள்



இந்தியப் பொருளாதார வீழ்ச்சி


வலைத் தளத்தில்
வாழ்வியல்
சொல்லும்
களம்...
பாருங்கள்!
முற்றம்
MUTRAM TV
இணைய தொலைக்காட்சி

மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly March 2020

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி**
இணை ஆசிரியர்
பேராசிரியர் **அப்பாத்துரை**
துணை ஆசிரியர்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**ஜெ. ராஜாசிங்,**
**ஆரோக்கிய சார்லஸ்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சைதை மணிமாறன்**
**செபாஸ்டின்** திருச்சி
**ஜான் ஜெயராமன்**
**சாதிக்பாட்சா**
**மு.கலைச்செல்வன்**
**ஆ.சிரோன்மணி**
**முருகன் தேவேந்திரன்**
**ஜான்ஜெனோவா ஜெர்லின்** திருச்சி

நிர்வாகம்
**மணிகண்டன்**
வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**ஆபிரகாம் லிங்கன்**

அலுவலக முகவரி
எண் 124, சுப.வீ. தெரு, (என்.டி.ஆர். தெரு),
ரங்கராஜபுரம்,கோடம்பாக்கம், சென்னை- 24
பேச : 8056281973, 044 42154408.
மின்னஞ்சல்: mutram2010@gmail.com
இணைய தளம் : **www.mutram.in**

MUTRAM
Indian Bank Account No,CA 920493454.
IFSC : IDIB000KI41
Rangarajapuram branch. Kodambakkam, chennai

## உள்ளே

இந்தியப் பொருளாதார வீழ்ச்சி (தலையங்கம்) ....................4

வானமே இல்லை....................5

நாடாகக் கொட்டாய் முதல் சினிமாக் கொட்டாய் வரை (1)
– பூவை தயா ....................8

உரை மருந்து மறந்துட்டோமே!....................10

பலி ஆகப்போகும் மீனவக் கிராமங்கள்....................12

பெரியார் பெரும்படை
– ஆறுமுகம்....................14

அந்நியர்களாக்கப்படும் இந்தியர்கள்
– வினீத் ....................16

அவர்தான் பெரியார்
–வி. உ. இளவேனில்....................18

ஒரு பூவின் சோகம் (சிறுகதை)
– சி. லோகநாயகி....................19

பஹ்ரைன் நாட்டில் குடியிருக்கும் தமிழரின் முகநூல் பதிவு.................21

ஆரிய மாயை எழுதிய எனக்கு சிறை
அண்ணா உரை....................23

நோய்க் கிருமிகளை அழிக்கும் எலுமிச்சை....................24

கடலும் கடல் சார்ந்த நிலமும் மீனவனுக்கே....................25

கோவிட் 19 கொரோனா வைரஸ்
அச்சத்திலிருந்து விடுபட சில வழிகாட்டுதல்கள்....................27

கொரோனா வைரஸ் வீட்டுக்குள் வருவதை தடுக்க
நீங்கள் செய்ய வேண்டியவை....................29

தமிழ்ப்புலவர்கள்....................31

முற்றம் இதழில் வெளியிடுவதற்காக அனுப்பப்படும் படைப்புகளைத் திருத்துவதற்கும் வெளியிடாமல் இருப்பதற்கும் ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. *– ஆசிரியர்*

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் "mutram" என்ற பெயருக்கு
எடுத்தனுப்பலாம்.



# இந்தியப் பொருளாதார வீழ்ச்சி



தமிழகத்தில் உள்ள அனைத்துக் கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்களில் உள்ள பெயர்ப்பலகைகள் தமிழில் இருக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தாலும்கூட, அதை பலர் பின்பற்றுவ தில்லை. மாற்று மொழிக்காரர்களின் வணிக நிறுவனங்கள், தமிழ்மொழிப்பற்று இல்லாதவர்கள் நடத்தும் வணிக நிறுவனங்கள், பன்னாட்டு வணிக நிறுவனங்கள் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தவ தில்லை. முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களது அரசு, இதில் கவனம் கொண்டு, பெயர்ப் பலகைகளில் தமிழ் முதலிடத்திலும், ஆங்கிலம் இரண்டாம் இடத்திலும், மற்ற மொழிகள் மூன்றாம் இடத்திலும் இருக்க வேண்டும். தமிழில் பெயர்ப் பலகை எழுதப்படாத வணிக நிறுவனங்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித் திருப்பது தமிழார்வலர்களின் மனங்களை மகிழ்ச்சிக் குள்ளாக்கியிருக்கிறது.

தமிழ்நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கிற மெட்ரி குலேசன் பள்ளிகள் இயக்ககம் இனிமேல் தனியார் பள்ளிகள் இயக்ககம் என்று பெயர் மாற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் செங்கோட்டையன் அவர்கள், தமிழக சட்டசபையில் அறிவித்தார். பள்ளிக் கல்வி வளாகத்தில் நூலகம் அமைக்கப்படும். குடியிருப்பு வளாகங்களில் சமுதாய நூலகம் அமைக்கப்படும். நடுவண், மாநில அரசுகளின் விருது பெற்ற தமிழ் நூல்களை நூலகங்களுக்கு வாங்கும் திட்டம் செயல் படுத்தப்படும், அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர் களிடையே வாசிக்கும் ஆர்வத்தை ஊக்கு விக்கும் வகையில், நூலகத்தை அதிக நேரம் பயன்படுத்தும் மாணவர்களுக்கு கேடயம், சான்றிதழ்கள் வழங்கப் படும்.

சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான பயிற்சியை மேம்படுத்த, நவீன கற்றல், உடல் இயக்க உபகரணங்கள் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக் கிறார்.

இந்த அறிவிப்புகள் வரவேற்கப்படத்தக்கவை களாகும். நடைபெறுகிற அரசில், கல்வித்துறை மிகச் சிறப்பாக நடைபெற்று வருவதாக மக்கள் கருதக்கூடிய அளவில் கல்வித்துறை இருப்பது சிறப்பான ஒன்றாகும்.

தமிழ்நாடு அரசு அறிவிக்கிற அறிவிப்புகள் எல்லாம் சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டால் தமிழகமாவது முன்னேற்றப்பாதை நோக்கிச் செல்லும் நிலை ஏற்படும்.

நடுவண் அரசு பொருளாதாரத்தில் வீழ்ச்சி அடைந்து வருவதை பொருளாதார நிபுணர்கள் கவலையுடன் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ரிசர்வ் வங்கிக் காப்பில் இருந்து கோடி கோடியாய் பணம் பெற்றது நடுவண் அரசு, அதுவும் போதவில்லை என்று இருப்பு இருக்கும் தங்கத்திலும் கைவைத்து விட்டது என்கிறார்கள். சாதி, மதம், வெறுப்புணர்வு எல்லாவற்றையும் விட்டுவிட்டு, மக்கள் நலனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நடுவண் அரசு செயல்படுமானால் இந்திய ஒன்றியத்தின் பொருளா தார நிலை உயரும். ●

# வானமே எல்லை!

'தமிழ் சேம்பர் ஆஃப் காமர்ஸ்' தனது சிற்றுண்டிக் கூட்டத்தை 'வானமே எல்லை' என்ற தலைப்பில் அண்மையில் நடத்தியது. இவ்விழாவில் தமிழ் சேம்பர் ஆஃப் காமர்ஸ் தலைவர் திரு. சோழநாச்சியார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். எம்ஆட்டோ நிறுவனர் திரு. மன்சூர்அலிகான் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

திரு. மன்சூர் அலிகான் பேசியதாவது,

என்னுடைய பெயர் மன்சூர் அலிகான், கடந்த ஏழு ஆண்டுகளாக ஆட்டோ துறையில் ஒரு மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற காரணத்திற்காக நிறைய முயற்சிகளை எடுத்து வந்தோம். அதனுடைய பலனாகத்தான் எலக்ட்ரிக் ஆட்டோவை இந்தியாவில் மட்டுமில்லாமல் வெளிநாடுகளிலும் அறிமுகப்படுத்த வாய்ப்புக் கிடைததுள்ளது.

பெரும்பாலான மக்களைப் போலவே எனக்கும் ஆட்டோக்களின் மீதும், ஆட்டோ டிரைவர்களின் மீதும் தவறான கருத்துக்கள் இருந்தது. அதை மாற்ற வேண்டும். மக்களுக்குப் பாதுகாப்பான பயணத்தை அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நானும் எனது நண்பர்களும் சேர்ந்து நம்ம ஆட்டோ என்ற நிறுவனத்தை ஆரம்பித்தோம். 2013ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்டோ மீட்டர் கட்டணத்தை அறிமுகப்படுத்தினோம். அதன் பிறகு வியாபார ரீதியாக அதிலிருந்து நான் வெளியேற வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது. 2014ஆம் ஆண்டு அதில் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக ஆட்டோத் துறையில் ஏதாவது ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்தில், மக்கள் ஆட்டோ என்று 2014ஆம் ஆண்டு இந்தியாவில் முதல் கணினி மயமாக்கப்பட்ட ஆட்டோவை அறிமகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது நாம் செய்யும் செயல்களில் புதுமையான விசயங்களை யோசிக்கணும், அதில் நாம் தனித்துவமாகத் தெரிய வேண்டும் என்று கடினமாகச் சிந்தித்து செயல்படுவேன்.

2014ஆம் ஆண்டு பெண்கள் ஓட்டக்கூடிய 100 ஆட்டோக்களை அறிமுகப்படுத்தினோம். 100 டேப் லட்டுகளை அதில் பொருத்தினோம். பயணம் செய்யும்



பெண்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் ஒரு பட்டனை அழுத்தினால் போதும் அதில் உள்ள Camera On - ஆகி அனைத்தையும் ரிக்கார்டு செய்து விடும். அதில் உள்ள Location- ஐ Police Station க்கு போகிற மாதிரியான Safety Feature இல் ஒரு அமைப்பை வடிவமைத்தோம். 2014ஆம் ஆண்டு இந்திய அரசின் சிறந்த Innovative Project என்ற விருதைப் பெற்றோம். அந்த நேரத்தில் 2ஜி Network தான் இருந்தது. 3ஜி இல்லை. அதனால் இந்த திட்டத்தையும் எங்களால் பெரிதாகக் கொண்டு வர முடியவில்லை. அந்நேரத்தில் OLA, UBER போன்றவை மார்க்கெட்டுக்குள் நுழைந்தன. நிறைய MNC Company கள் பில்லியன் டாலர் முதலீடுகளோடு வந்தார்கள்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கம்பெனியாக அவர்களோடு பொருளாதார ரீதியாகவும் சரி, தொழில் நுட்ப ரீதியாகவும் சரி போட்டி போட முடிய வில்லை. அதன்பிறகு இரண்டு ஆண்டாக மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டு வந்தோம். இத்திட்டத்தை வெற்றிகரமாகக் கொண்டு வர வேண்டும் என்றால் MNC Company களை Competetion Company களாக பார்க்கக்கூடாது. அவர்களின் திட்டத்தை முறியடிப்பது போல் ஒரு தொழில் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று எண்ணி, முயற்சி செய்து 2017ஆம் ஆண்டு வி ஆட்டோ என்ற Mobile Application ஐ அறிமுகப்படுத்தினோம். ஆட்டோ துறையில் நாம் தொடர்ந்து முயற்சி பண்ணு வதற்கான காரணம் என்னவென்றால் கிட்டத்தட்ட இந்தியாவில் மட்டும் 2கோடி ஆட்டோக்கள் இருக்கின்றன. இத்துறையை நம்பி இலட்சக்கணக்கான குடும்பங்கள் இருக்கின்றன. ஆண்டில் ஆட்டோ துறையில் மட்டும் 25,000 கோடி வணிகம் நடைபெறு கிறது. M-Auto அப்ளிகேஷன் மூலமாக 44 Location-களை வெற்றிகரமாகத் தொடங்கி, இன்றைக்கு இந்தியா முழுவதும் கிட்டத்தட்ட 50,000 ஆட்டோக்களை பயன்பாட்டில் வைத்துள்ளோம். தற்போது அனைத்து மற்ற அப்ளிகேஷன்களிலும் ஆட்டோ, கார் இரண் டிற்கும் சேர்த்து ஒன்றாகவே திட்டம் அமைத்துள்ள னர். குறிப்பாக ஆட்டோவிற்கு மட்டுமே ஒரே பிளாட்பார்ம் இருக்கு என்றால் அது M-Auto மட்டும் தான். இத்துறையை அடுத்த நிலைக்குக் கொண்டு போவதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்த போதுதான், ஆட்டோ துறைக்கு என்னென்ன பிரச்சனைகள் எல்லாம் இருக்கு என்று ஆராய்ந்து அதைச் சரிசெய்ய முடிவெடுத்தேன்.

ஒருநாள் ஆட்டோ துறையில் ரூ.1000/ சம்பாதிக்க வேண்டுமென்றால் ரூ.500/ செலவழிக்க வேண்டியுள் ளது. எதற்காக என்றால் ரூ.400 பெட்ரோல் போட வேண்டும். ரூ.100/ ஆயில் போட வேண்டும். இது போன்ற செலவுகள் இருக்கிறது. நாம் ஏன் மாசு ஏற்படுத்தாத எலக்ட்ரிக் ஆட்டோக்களாக மாற்றக் கூடாது என்று தோன்றியது. பெட்ரோல், டீசல் வண்டிகளை எலக்ட்ரிகல் வண்டிகளாக மாற்றும் முயற்சியில் இறங்கி வெற்றியும் அடைந்தோம். இந்தியாவிலேயே எலக்ட்ரிக் லைசன்ஸ் வாங்கிய முதல் தமிழ்நாட்டு நிறுவனம் M-Auto தான். M-Auto வின் சிறப்பம்சம் என்னவென்றால் வெறும் சார்ஜ் போட்டால் 100கி.மீ. வரை ஓடும். பழைய பெட்ரோல் இன்ஜினை அகற்றிவிட்டு அதிலேயே Electric DC Motor லித்தியம் Battery ஐ இன்ஜின் செய்து பழைய ஆட்டோவையே புத்தம் புதிய Registration எலக்ட்ரிக் ஆட்டோவாக மாற்றித் தருகிறோம். அதை புதியதாக செய்து 3 ஆண்டு FC, License வுடன் இந்த வாகனத் தைக் கொண்டு வருகிறோம்.

பெட்ரோல், டீசல், லிறிநி இல் இயங்குகின்ற ஆட்டோக்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.500/ செலவு ஆகிறது. ஆனால் எலக்ட்ரிக் ஆட்டோவில் ரூ.20/ முதல் ரூ.25/ வரை மட்டுமே செலவு ஆகும். இதனால் ஆட்டோ வருமானம் முழுமையாக அவர்களுக்கே பயனளிக்கும். ஒரு நாளைக்கு 100 கி.மீ.க்கு மேல் ஆட்டோவை இயக்க முடியாது. இது போன்ற எலக்ட்ரிக் ஆட்டோக்களை அவர்கள் பயன்படுத்தும் போது கண்டிப்பாக அவர்களிடம் பொருளாதாரம் முன்னேற்றம் அடையும். இந்தியாவில் மட்டும் இதை செயல்படுத்தாமல் அல்மேனியாவில் Public System ஆக கொண்டு வந்து இருக்கிறோம். அதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. பங்களாதேஷ், இலங்கை போன்ற அரசுகளுடனும் பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருக்கிறது.

உலகில் உள்ள கிட்டத்தட்ட 70 நாடுகளில் உள்ள பழைய பெட்ரோல், டீசல் ஆட்டோக்களை எலக்ட்ரிக் ஆட்டோக்களாக மாற்றுவதுதான் M-Auto - வின் குறிக்கோள். பெண்களுக்கு பெரும்பான்மையான வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது M-Auto வின் அடுத்த குறிக்கோள். பெண்களுக்கு பெரும்பான் மையான வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது M-Auto வின் அடுத்த குறிக்கோள். M-Auto எதிர் காலத் திட்டம் என்னவென்றால் அனைவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதற்காக M-Auto நிறுவனம் கல்லூரி ஒன்றை உருவாக்கி வருகிறது. அதில் ITI Engineering படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து, இந்தியா முழுவதும் ஏற்படுத்தப் படவுள்ள M-Auto Service Centre இல் பணி அமர்த்தப் படுவார்கள். இதன் மூலம் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பைப் பெருக்க முடியும்.

தமிழ்நாட்டில் மட்டும் 10,000 விஆட்டோக்களை மார்ச் மாதம் முதல் விற்பனை செய்யத் திட்டமிட்டு இருக்கிறோம். தமிழக அரசு எங்களுக்கு சில வரிவிலக்குகள் அளித்து இருக்கிறது. எலக்ட்ரிக் ஆட்டோவை பதிவு செய்வதற்கு M Fees, Permit Tax, Road Tax போன்றவை கிடையாது. தனித்துவமாக M-

Auto விற்கு பச்சை அங்கீகாரம் அரசு வழங்கி இருக்கிறது. பெண்களில் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக 100ஆட்டோக்களை பெண்களுக்கு வழங்க உள்ளோம்.

சென்னை முழுவதும் மார்ச் மாதத்திலிருந்து M-Auto-களை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருகிறோம். பொருளாதார ரீதியாக ஆட்டோ ஓட்டுனர்களின் வாழ்வாதாரத்தை மாற்ற வேண்டும் என்பதுதான் எங்களின் முயற்சி. அதில் நிறைய சவால்களை கடந்து தற்போது வெற்றி கண்டுள்ளோம்.

ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கும் ஒரு எலக்ட்ரிக் ஆம்புலன்ஸ் இலவசமாக அளிக்க உள்ளோம். இதனால் அடிப்படை வசதி இல்லாத ஏழை, எளிய கிராம மக்கள் பயனடைவார்கள். நிறைய நாடுகளில் மாசு காரணமாக ஆட்டோக்களை அதிகளவில் பயன்படுத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டள்ளன. இந்தச் சூழ்நிலையில் மாசு ஏற்படுத்தாக எலக்ட்ரிக் ஆட்டோ, அது போன்ற நாடுகளுக்கு ஒரு நல்ல மாற்றத்தைக் கொடுக்கும். பண உதவியும் 0% வட்டி விகிதத்தில் நாங்களே அளிக்கிறோம். இது மாதிரியான திட்டங்களை மக்களுக்கு அளிக்கும்போது ஆட்டோ துறையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவது தான் எங்களின் நோக்கம்.

அர்மேனிய அரசு, அவர்களின் மாளிகையில் M-Auto வை அரசு வாகனமாக அறிவிக்கப் போகிறார்கள். விரைவில் இங்கிருந்து ஆட்டோவை அங்கு அனுப்பி வைக்கப் போகிறோம். தமிழ்நாடு முழுவதும் ரூ.25 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை அளித்து இருக்கிறோம். அவர்களுக்கு மாதம் ரூ.10லட்சம் முதல் ரூ.15லட்சம் வரை வருமானம் வரக்கூடிய வாய்ப்பை உருவாக்கி கொடுத்து உள்ளோம். 6000 ஆட்டோக்களுக்கு ஆர்டர் எடுத்து இருக்கிறோம். 50 Dealership-ஐ Select செய்து உள்ளோம். M - Auto புதியதின் விலை ரூ.2.5 லட்சம். இந்தப் பணத்தை அவர்கள் ஆறு மாத்தில் சம்பாதித்துவிட முடியும். இந்த மாற்றத்துக்கு மக்கள் ஆதரவு கொடுத்து, தமிழக அரசும் ஆதரவு அளித்து இருக்கிறார்கள். எலக்ட்ரிக் ஆட்டோவிற்கு மாநில அரசுகள் அங்கீகாரம் அளித்து இருக்கிறார்கள். 8 மாநிலங்களிலும் உடனடியாக M - ஆட்டோவை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம். விரைவில் மக்கள் போக்குவரத்துப் பயன்பாட்டில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டு இருக்கிறோம்.

கௌரவச் செயலாளர் திரு. ரவிக்குமார் டேவிட் அவர்கள் நன்றியுரை கூற நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

நன்றி : TCC DIGEST

---



உலகப் பணக்காரர், கம்ப்யூட்டர் உலகின் பேரரசன் பில்கேட்சிடம் இடம் ஒருவர் கேட்டார்.

“உங்களைவிடப் பணக்காரார் எவரும் இருக்கிறார்களா?”

“ஆம், ஒருவர் இருக்கிறார். பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டேன். நியூயார்க் நகர விமான நிலையம் சென்றேன். நாளிதழ்களின் தலைப்புச் செய்திகளைப் படித்துக் கொண்டிருந்தேன்.

நாளிதழ் ஒன்றினை வாங்கலாம் என நினைத்தேன். ஆனால், என்னிடம் சில்லறை நாணயம் இல்லை. எனவே, அதை விடுத்தேன். அப்போது, ஒரு கருப்பினச் சிறுவன், என்னை அழைத்து, அந்த நாளிதழ் பிரதியைக் கொடுத்தான். என்னிடம் சில்லறை இல்லை எனக் கூறினேன். அவன் பரவாயில்லை, இலவசமாகக் கொடுக்கிறேன் என்றான். மூன்று மாதங்கள் கழித்து, நான் அங்கு சென்றேன். மறுபடியும், அதே கதை நடந்தது. அந்தச் சிறுவன் நாளிதழை இலவசமாகக் கொடுத்தான். ஆனால், நான் வாங்க மறுத்தேன். அவன், அவனுக்கு வந்த அன்றைய லாபத்திலிருந்து தருவதாகக் கூறி கொடுத்தான்.

19 ஆண்டுகள் கழிந்தன. நான் பணக்காரன் ஆகி விட்டேன். அந்தச் சிறுவனைக் காணும் ஆவல் எனக்கு வந்தது. ஒன்றரை மாதத் தேடுதலுக்குப் பின் அவனைக் கண்டு பிடித்தேன். அவரைக் கேட்டேன். “என்னைத் தெரிகிறதா?” “தெரிகிறது. நீங்கள் புகழ் வாய்ந்த பில்கேட்ஸ்” என்றார். எனக்கு பல ஆண்டுகளுக்கு முன்னால், இரண்டு முறை இலவசமாக நாளிதழ்களை வழங்கினாய் எனக் கூறினேன். தற்போது அதற்காக, நீ என்னவெல்லாம் விரும்புகிறாயோ, அவற்றைக் கைமாறாகத் தர விரும்புகிறேன் என்றேன்.

“உங்களால் அதற்கு ஈடு செய்ய முடியாது.” என்றார் அந்தக் கருப்பு இளைஞர்... “ஏன்?” என்றேன் நான்.

அந்த இளைஞர் “நான் ஏழையாய் இருந்தபோது, உங்களுக்குக் கொடுத்தேன் ஆனால், நீங்கள் பணக்காரர் ஆன பின்னே எனக்குக் கொடுக்க வருகிறீர்கள். ஆகவே, நீங்கள் எவ்வாறு சரிக்கட்ட முடியும்?” என்றார்.

கருப்பு இளைஞர்தான் என்னைவிடப் பணக்காரன் என்பதை உணர்ந்தேன்” என்றார் பில்கேட்ஸ்.

கொடுப்பதற்கு நீ பணக்காரனாக இருக்க வேண்டுமென்பதோ, பணக்காரன் ஆகும் வரை காத்திருக்க வேண்டும் என்பதோ கிடையாது.

உதவ வேண்டும் என்ற குணத்திற்கு காலம், நேரம், ஏழை, பணக்காரன் என்பது கிடையாது.



# நாடகக் கொட்டாய் முதல்... சினிமாக் கொட்டாய் வரை!

## 1



# அப்பா தந்த அறிவு!

## பூவை தயா

வரலாறுகள் மெச்சிப் புகழும் வீரம் மிகுந்த சிவகங்கைச் சீமையில்... கீழப்பூங்குடி எனும் கிராமத்தில், கவிஞர் பூவைசெங்குட்டுவன் . காந்திமதி யின் மூத்த மகனாய்ப் பிறந்தேன். செல்வச் செழிப்பு மிக்க ஜமீன் குடும்பத்தில் பிறந்த நான்... அதைக் கொஞ்சம் அனுபவித்தவனும்கூட... நினைவு தெரியாத வயதில்!. என்னுடன் பிறந்தவர்கள், தங்கைகளான கலைச்செல்வி, விஜயலட்சுமி, தம்பி ரவிச்சந்திரன். சொந்த ஊரில் பிறந்த பெருமை எங்கள் நால்வரில் எனக்கு மட்டுமே!

எனக்கு நான்கு வயதிருக்கும்போது சென்னைக்குப் பயணமானோம். சென்னையில் முதன் முதலில் கோடம்பாக்கத்தில் வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கினோம். கோடம்பாக்கம் வந்ததற்குக் காரணம்... அங்கேதான் சினிமா ஸ்டுடியோக்கள் அதிகம். கூப்பிடும் தூரத்தில் இருந்தால்தான் அப்பாவுக்கு பாட்டெழுதும் வாய்ப்புகள் கிடைக்குமாம்... பின்னா ளில் அப்பா சொல்லக் கேட்டேன். அதன் பின்னர் தேனாம்பேட்டை வந்தோம். தேனாம் பேட்டையில் திருவள்ளுவர் சாலை சந்திப்பில் உள்ள பாரதியார் தெருவிற்கு குடி புகுந்தோம்.

காலங்கள் உருண்டோடின... அப்பா திரைப்படத் திற்கு பாடல்கள் எழுதிக் கொண்டிருந்த நேரம். அச்சமயம் நான் எட்டாம் வகுப்பை இரண்டு ஆண்டுகளாகப் படித்துக் கொண்டிருந்தேன். கொஞ்சம் எழுதப்படிக்கத் தெரிந்தபின் படிப்பில் நாட்டமில்லை. மேலும் பள்ளியின் நற்பெயரைக் காக்கும் விதத்தில் படிப்பை நிறுத்திக் கொண்டேன்.

அப்பா எழுதி வைத்திருக்கும் கதைகள், பாடல் களை எடுத்து, படித்துப் படித்துப் பார்த்து, நானும் பாடல்கள் எழுத ஆரம்பித்தேன்... பதினைந்து வயதில். எனது கற்பனைக்கேற்ப நான் எழுதிய பாடல்களை வீட்டிற்கு வருவோரிடம் எல்லாம் காட்டுவேன். ஒரு பாடலில் முதல் அடியை இப்படி எழுதினால் இரண்டாம் அடி இப்படி முடிய வேண்டும் என்பதை அப்பா எழுதிய பாடல்கள் மூலம் அறிந்து கொண்டேன். ஆனாலும் சில பல நேரம் நான் எழுதிய பாடல்கள் எனக்கே புரியாமல் இருந்தது. நல்ல வேலையாக தெய்வ அருளால் எழுதிய அந்தப் பாடல்களை எல்லாம் தொலைத்து விட்டேன். ஒரு சிலவற்றை தொலைப்பதும் மறந்து போவதும் நல்ல தற்கே என்பதை, பின்னாளில் தெரிந்து கொண்டேன்.

இவ்வாறான காலகட்டத்தில்... எனது அம்மா அப்பாவிற்கு பிறக்காத பிள்ளையான, செல்லப் பிள்ளையான அண்ணன் கவிஞர் அறிவுமதி அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார்கள். உடன்பிறந்த நாங்கள் நால்வரும் கவிஞர் அறிவுமதியை அண்ணன் என்றே அழைப்போம். அவரது வீடும் அடுத்த தெருவில்தான். அச்சமயம் அவர் பட்டப் படிப்பை முடித்திருந்த நேரம்.

அவர் வரும்போதெல்லாம், அவரிடம் நான் எழுதிய பாடல்களையும் கவிதைகளையும் நாடகங் களையும் பார்க்கச் சொல்வேன். பார்த்து படித்தபின் அப்பாவிடம் "தயாவுக்கு உரையாடல் நல்லா எழுத வருது" என்று கூறுவார். பிறகு என்னிடம் "தொடர்ந்து எழுது தம்பி. எழுத எழுத நல்லா வந்துடும்" என்று கூறி நான் எழுதிய ஒரு கவிதையை திருத்தம் ஏதும் செய்யாமலே குற்றாலத்திலிருந்து வெளிவரும் மாத இலக்கிய இதழான 'மலர்ச்சி' என்ற இதழுக்கு அனுப்பி வைக்கும் நேரம் "பெயரை எப்படிப் போடலாம் தயா?" என்றார். நான் உடனே 'பூவைதயா என்று போடுங்கள்

அண்ணன்' என்றேன். அவரும் சம்மதித்து அப்படியே போட்டார். அன்று வரை தயாநிதியாக இருந்த நான் பூவை தயாவாக மாறினேன். இன்றுவரை அப்பெயருடனே எழுதி வருகிறேன்.

அண்ணன் அறிவுமதியால் நான் எழுதிய முதல் கவிதை பிரசுரமாகி அந்த இதழ் எனக்கு கையில் கிடைத்த நேரம் பெரும் மகிழ்ச்சியடைந்தேன். அதன் பின்னர் அறிவுமதி அவர்கள் "தயா! அப்பா பாட்டெ முதட்டும். நீ கதை உரையாடல்னு எழுது" என்று அறிவுரை வழங்கினார்கள். அவரின் சொல்லுக்கு இணங்கி, கொஞ்சமாக கவிதைகளையும் நிறைய உரையாடல்களையும் எழுதி எழுதி பழகிக் கொண்டிருந்தேன்.

இவ்வமயம் உங்களிடம் ஒன்றை சொல்ல மறந்து விட்டேன். எனக்கு ஒன்பது வயது இருக்கும். மாநகராட்சிப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். ஆண்டுதோறும் வரும் சுதந்திர தினம் வந்தது.

அந்த சுதந்திரத்தினத்தன்று நான் மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியான கருப்பு சிவப்புக் கொடியை கடையில் வாங்கி, சட்டையில் குத்திக் கொண்டு வந்தேன். சக மாணவர்கள் என்னையே பார்த்தது என் நினைவில் இன்றும் நிழலாடுகிறது. நான் ஏன் அப்படிச் செய்தேன் என்பதை அடுத்த இதழில் அறிவோம்!

**பயணம் தொடரும்.**

# தாய்மொழியை வணங்கு!

கருவறையில்
இருக்கும் பொழுதே
கேட்குமாம் மொழியே
பிறந்து வளரும் பொழுதே
பேசுமாம் நம்மொழி
தமிழ் மொழியே!

நாடி நரம்பில்
பாய்ந்த மொழி
இதயத்தில் உயிர்
மூச்சாக வாழும் மொழி

நாம் வாழ்வதற்கு
உயிர் கொடுத்து
உதவிடும் மொழி
மண்ணின் மனத்தைக்
காக்கும் மொழி!

தத்தித் தத்திப் பேசினாலும்
திகட்டாமல்
இனித்திடும் மொழி
தரணியெங்குமே
பரவிக்கிடக்கும்
மொழியே நம்
தாய்மொழி


பல கவிஞர்களையும்
உச்சத்தில்
நிறுத்தும் மொழி
பல நூல்களைத்
தந்த மொழி
மனிதனின் வாழ்க்கையை
நெறிப்படுத்தும் மொழி

திருக்குறளைத் தந்து
வாழ்க்கையைப்
புரியவைத்த மொழி

அயலவரையும்
அரவணைக்கும் மொழி
விண்ணையும்
தொட்ட மொழி
முதல் மனிதன்
பேசிய மொழி
நம் தமிழ் மொழி!

உறவுகளை முறைப்படுத்தி
முறைகள் சொல்லி
அழைக்கும் மொழி
தமிழ் மொழியின்
தாலாட்டும் மொழி
தாய்மொழியை வணங்குவோம்!

**வாணியம்பாடி தியாகராசன்.**



# 'உரை மருந்து' மறந்துட்டோமே!

குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு ஆற்றல் தரும் அருமையான பல பாரம்பரிய முறைகள் நம்மிடம் இருந்தன. அவை தற்போது 'வேக்ஸின்' களின் வருகையால் ஒட்டுமொத்தமாக மலையேறிவிட்டன. குழந்தைகள் நல மருத்துவர்கள் இந்தப் பாரம்பரியப் புரிதலை ஏற்றுக் கொள்ள மறுப்பதும் இந்த முறைகள் தொலைந்து போவதற்கு முக்கியமான காரணமாகி விட்டது.

கிட்டத்தட்ட 16 வகையான வேக்ஸின்களை வலியுறுத்தும் மருத்துவச் சமூகம், நம்மிடையே இறந்த 23 நோய் எதிர்ப்பு ஆற்றல் அரும் மருந்துகளை அதன் ஆழத்தையும், மருத்துவக் குணத்தையும் புரிந்து கொள்ளாமல், மறக்கச் செய்து விட்டது.

இந்தக்கால தாய்மார்கள் பலருக்கு உரை மருந்து என்ற இந்த வார்த்தை புதிதாக இருக்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் அம்மாவிடமோ அல்லது பாட்டியிடமோ இதைப் பற்றிக் கேட்டால், அவர்கள் சொல்வது இதுவாகத்தான் இருக்கும். 'ஆம் அந்தக்காலத்தில் நாங்கள் உரை மருந்து கொடுக்கமால் குாந்தைகளை வளர்த்ததில்லை', இந்த அரிய புதையலை, மூடநம்பிக்கை, நேரமின்மை, சரியான புரிதல் இன்மை, நம் முன்னோர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள் என்று நினைப்பது போன்ற பல காரணங்களால் மறந்து விட்டோம். நாங்கள், நீங்கள் இதைச் செய்தே ஆக வேண்டும் என்று உங்களை வற்புறுத்தவில்லை. ஆனால், நீங்கள் உங்கள் குழந்தையின் நன்மைக்காக இந்த மருத்துவ முறை பற்றி சிறிது ஆராய்ந்து பின்னர் முடிவு எடுங்கள்.

அந்தக்காலத்தில் மருத்துவமனைக்கு குழந்தைகளைத் தூக்கிச் சென்றதே இல்லை என்ற நிலை, தற்போது மாறி இருப்பதைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.

**உரை மருந்து என்றால் என்ன?**

இயற்கை மருந்துகள் சிலவற்றை உரைகல்லில் உரைத்து குழந்தைகளுக்குப் புகட்டவது.

**உரை மருந்துகள் யாவை?**



1. வசம்பு, 2. கடுக்காய், 3. மாசிக்காய், 4. சித்தரத்தை, 5. சாதிக்காய், 6. சுக்கு, 7. மஞ்சள் (தேவை என்றால்)

**எப்படி உபயோகப்படுத்துவது?**

முதலில், மேற்கூறப்பட்டுள்ள மருந்துகளை ஒரு கப் தண்ணீர் அல்லது தாய்ப்பால் விட்டு கொதிக்க விடவும். பிறகு ஒரு கப் தண்ணீர் அரை கப் அளவான உடன், தண்ணீரை வடிகட்டிவிட்டு மருந்துகளை நிழலில் உலர்த்தி காற்று புகாத, மூடி போட்ட பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு மருந்துகளை உரைகல்லில் தாய்ப்பால் அல்லது தண்ணீர் விட்டு உரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மருந்தையும் இரண்டு முதல் பதினைந்து முறை வரை உரைக்கலாம். (வசம்பைத் தவிர) உரைத்து எடுத்த மருந்தை பாலாடையில் விட்டு மேலும் சிறிது தாய்ப்பால் அல்லது தண்ணீர் விட்டு குழந்தைக்குப் புகட்ட வேண்டும்.

**எப்போது கொடுக்க வேண்டும்?**

குழந்தையைக் குளிக்க வைத்தவுடன் இந்த மருந்தைக் கொடுப்பது வழக்கம். ஒருநாள் விட்டு மறுநாள் கொடுக்கலாம். குழந்தையின் இரண்டு மாதம் முதல் மூன்று வயது வரை கொடுக்கலாம்.

உரை மருந்துக்கான மூலப் பொருட்களும் அவற்றைச் சுத்தப்படுத்தும் முறைகளும் அவற்றின் மருத்துவப் பயன்களும்...

கடுக்காய், சித்தரத்தை, சுக்கு, சாதிக்காய், மாசிக்காய், வசம்பு என்ற ஆறு கடைச்சரக்குகள்.

நெல்லைப் புழுக்குவதற்கு வேக வைக்கும்போது நெல்லுடன் இவற்றை அப்படியே வெள்ளைத்துணியில் முடித்து வைத்துவிடவும். அல்லது (கிலோ நெல் வாங்கி வந்து தனியாக அவிக்கவும்.) அரை வேக்காடு ஏற்பட்டதும் (காய்களை அழுத்தினால் அழுந்து பதம் வந்தவுடன்) எடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். உரை மருந்து தயார்.

கை அகலத்திலுள்ள உரைகல் ஒன்று தேவை. அதில் வெந்நீர், வெற்றிலைச்சாறு, துளசிச் சாறு, ஓமகஷாயம், இஞ்சிச் சாறு இவற்றில் ஒன்றைவிட்டு ஒவ்வொன்றையும் வயதிற்கேற்றபடி 2 அல்லது 5 தடவை உரைத்து வந்த விழுதை தேன் அல்லது சர்க்கரை சேர்த்துக் கொடுக்கவும்.

வாயு, சளி வெந்நீர். சளி, மப்பு வெற்றிலைச்சாறு. துளசிச்சாறு, தேன். மப்பு, காய்ச்சல், வாந்தி இஞ்சிச் சாறு, தேன் என்று மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

**கடுக்காய்.**

நல்ல செரிமான ஆற்றல், பசி தரும், மலத்தை இளக்கும், புளிப்பு (வயிற்றில்) அதிகமாவதைத் தடுக்கும். செரிமானமற்ற பேதியைத் தடுக்கும். குடல், இரைப்பை, கல்லீரல் சரியாக இயங்கச் செய்யும்.

**சுக்கு.**

வயிற்றில் வாயு சேர விடாது. வயிறு உப்புசம், மலசலம் சரியாக வெளியேறாதிருத்தல், மப்பால் வயிற்றுவலி, செரிமானம் ஆகாமை, வாந்தி இவற்றைப் போக்கும். ஆனால், வயிற்றில் அழற்சி, கடுப்புடன் சீதத்துடன் மலம் வெளியாதல், ரத்தப்போக்கு போன்றவை இருந்தால் சுக்கை உரைத்துக் கொடுக்கக்கூடாது.

**சித்தரத்தை.**

தொண்டை மார்பு இவற்றில் கபக்கட்டு, உடலில் கடுப்பு வலி இவற்றுக்கு நல்லது. எண்ணெய் தேய்த்தால் காய்ச்சல், சளி பிடிக்கும் என்ற நிலையில் இதனைத் தொடர்ந்து கொடுக்கலாம். தொண்டை வாய்ப்புண், வறட்டிருமல், வயிற்று வேக்காளம் உள்ள நிலையில் சித்தரத்தையைக் கொடுக்கக்கூடாது. கபக்கட்டுள்ள நிலையில் இதனையும் சுக்கையும் அதிகம் பயன்படுத்தலாம்.

**சாதிக்காய்.**

இரைப்பையை நன்கு தூண்டி, சுவை கூட்டி, பசி, செரிமான ஆற்றல் தரும். சிடுசிடுப்பு, பரபரப்பு, காரணம் புரியாத அழுகை முதலியவைகளைக் குறைத்து அமைதியாகத் தூங்கச் செய்யும். இளகிச் சூட்டுடன் அடிக்கடி மலம் போவதை இது தடுக்கும்.

**மாசிக்காய்.**

வேக்காளத்தக் குறைக்கும். வாய்ப்புண், இரைப்பைப் புண், குடல் புண் இவற்றைக் குறைக்கும். பற்களைக் கெட்டியாக, அழகாக வளரச் செய்யும். உடலில் நச்சு ஆற்றல் பரவாமல் தடுக்கும். சிறுநீர் தாராளமாக வெளியாகும். தொண்டைச் சதை வளர்ச்சி, உள்நாக்கு வளர்ச்சி, சீத ரத்தத்துடன் மலப்போக்கு, வாயில் உமிழ்நீர் அதிகம் பெருகுதல் இவற்றைக் கட்டுப் படுத்தும்.

**வசம்பு**

வம்பும் கடுக்காயும், பிள்ளை வளர்ப்பான் என்ற பெயர் பெற்றவை. பசியின்மை, சுறுசுறுப்பின்மை, ருசியின்மை இவற்றைப் போக்கும். பரபரப்பு, சிடுசிடுப்பு, அமைதியின்மை போன்றவற்றைச் சீராக்கும். பால் செரிமானமாகாமல் வெளுத்து மலம் போவது, கீரிப்பூச்சி, உப்புசம், வயிற்றுவலி, மார்பில் கபச் சேர்வை இவற்றைப் போக்கும். உடல் சீராக வளர உதவும். கார மருந்து என இதற்குப் பெயர். அதனால் உரைத்த மருந்தை சிறுகச் சிறுக புகட்ட வேண்டும். தேன், சர்க்கரை சேர்த்து இனியதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். சிறு சிசுவிற்கு 1015 உரைப்பு வரை தேவைப்படும். மூளைக்கும் குடலுக்கும் நல்ல செயல் திறனைத் தரும் இம்மருந்தை குழந்தைகளுக்கு ஏழு அல்லது எட்டு வயது முடியும் வரை தொடர்ந்து கொடுத்து வரலாம்!

●

# பலி ஆகப்போகும் மீனவ கிராமங்கள்!

சாகர்மாலா திட்டத்தின் பாதிப்புகள் குறித்து வேறு எங்கும் தேட வேண்டாம். மத்திய அரசின் கப்பல்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள சாகர்மாலா குறித்த தேசிய கண்ணோட்டம் திட்ட ஆவணத்தில் (Sagarmala / National perspective plan, Apr 2016) அவர்களே கூறுகின்றனர். கடற்கரை சமூகத்தினரின் வளர்ச்சி என்ற தலைப்பில் இறுதி அத்தியாயத்தை (பக்கம் 23283 வரை) இணைத்துள்ளனர். இதில் சாகர்மாலா திட்டத்தினால் பாதிக்கப்படுவார்கள் என்பதை வெளிப்படையாகவே ஏற்றுக் கொண்டுள்ளது.

திட்டத்தினால் ஏற்படும் பாதிப்பிற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மறுவாழ்வு அளிப்பதற்கு நிதி அமைப்பு ஒன்றை ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ள திட்டத்தைத் தவிர ஆவணத்தில் வேறு எதுவும் இல்லை.

சாகர்மாலா தேசிய கண்ணோட்ட திட்ட ஆவணத்தில் துறைமுகத்தை நவீனப்படுத்தவது துறைமுகத்தைச் சார்ந்த தொழிற் வளர்ச்சி, சாலை மற்றும் ரயில் போக்குவரத்துடன் இணைப்பு என திட்டங்கள் ஒவ்வொரு அத்தியாயமாக வரிசைப் படுத்தப்பட்டுள்ளன.


இதில் இறுதி அத்தியாயமாக தவிர்க்க முடியாத நிலையிலும் பெயரளவிலும் கடற்கரை சமூகத்தினரின் வளர்ச்சி இணைக்கப்பட்டுள்ளது.

கடற்கரைச் சமூகத்தினரின் வளர்ச்சி என்ற பெயரில் உள்ள அத்தியாயத்திலும் முன்னால் கூறப்பட்டுள்ள 3 திட்டங்களின் (துறைமுகம் நவீனப் படுத்துதல் துறைமுகம் சார்ந்த தொழில் வளர்ச்சி மற்றும் சாலை, ரயில் போக்குவரத்து இணைப்பு) ஏற்பட உள்ள பயன்களே மீண்டும் கூறப்பட்டுள்ளன என்பது மிகவும் ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

இறுதி அத்தியாயத்தில் என்னதான் கூறப்பட்டுள்ளது? முதலாவதாக தேசிய அளவில் மீனவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் சமூகப் பொருளாதார நிலையை புள்ளி விபரங்களுடன் கூறுகிறது. அந்த அத்தியாயத்தில் கூறுவதாவது:

நாட்டின் 72 கடற்கரை மாவட்டங்களில் 18 விழுக்காடு மக்கள் வாழ்கின்றார்கள். 2010 கடற்கரை மீனவர்கள் கணக்கெடுப்பில் 61 விழுக்காடு கடற்கரை மீனவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். இவுர்களில் பெரும்பாலானோர் கடன்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கடன்களை திரும்பச் செலுத்த முடியாமல் மீண்டும் மீண்டும் கடன்களை வாங்கி மீள முடியாத கடன் வலைகளில் மூழ்கியுள்ளனர். பெரும்பாலான





மீனவர்களின் குடும்பத்தினருக்கு அடிப்படை சுகாதார வசதிகள் கிடையாது. அவர்கள் தொடர்ந்து கல்வி கற்க முடியாதபடி இடை நிற்பவர்களாக உள்ளனர். 88 விழுக்காட்டினருக்குத்தான் மின்வசதி உள்ளது. 27 விழுக்காட்டினருக்குத்தான் சுகாதார வசதிகள் உள்ளன. 58 விழுக்காட்டினருக்கு பஸ் வசதிகள் உள்ளன.

மீனவர்களின் அவல வாழ்வு குறித்து இவ்வளவு துல்லியமான புள்ளிவிபரங்களைக் கூறும் சாகர்மாலா தேசிய கண்ணோட்டத் திட்டம். அவர்கள் முழுமை யாக அழிக்கப்படப் போவது குறித்த மௌனம் சாதிக்கிறது. சாகர்மாலா திட்டத்திற்கு இடையூறாக, பெரும் தடைக்கற்களாக மீனவர்கள் உள்ளனர் என்பதை சொல்லாமல் சொல்கிறது.

இவர்கள் மோசமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதை கிரிட்டிகல் ஸ்டேக் கோல்டர்கள் (critical stakeholders) என்ற நாகரீகமான வார்த்தையின் மூலம் ஆவணம் முன்வைக்கிறது. துறைமுகம் கட்டுவதினா லும் அதன் செயல்பாடுகளிலும் ஏற்படும் பாதிப்புகள் குறித்து இதுவரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வில்லை. துறைமுக வளர்ச்சித் திட்டங்களினால் மறை முக பாதிப்புகள் என மக்கள் இடம் பெயருதல், கடற் கரைகள் இழப்பு, கடலுக்கும், கடற்கரைகளுக்கும் செல்ல முடியாத நிலை மற்றும் மோசமான மறு வாழ்வுத் திட்டங்கள் என ஒரு சிறிய பத்தியில் போகிற போக்கில் இத்தகைய மிகக் கடுமையான பாதிப்புகள் கூறப்பட்டுள்ளன.

கடல், கடற்கரை மற்றும் சுற்றுச்சூழல் மீதான உள்நாட்டு நீர்நிலைகளின் மீதான திட்டத்தின் சமூக பாதிப்புகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் பரிசீலிக்கப்படுமாம். திட்டங்கள் தொடங்கப்படுவதற்கு முன்னதாக தேவையான அனுமதிகள் வழங்கப்படு மாம்.

இவ்விடத்தில் இதற்கு முரண்பாடாக சுற்றுச்சூழல் அனுமதிகள் தாமதிக்கப் படாமல் அதி விரைவாக அளிக்கப்படும் என்று நிதின் கட்கரி அறிவித்ததை நினைவு கூற வேண்டும். ஆவணத்தில் அதுவும் போகிற போக்கில் சாகர்மாலா திட்டம் ஏற்படுத்தும் சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதிப்புகள் அலசி ஆராயப்பட வேண்டும்.

அதில் ஏற்பாடும் பிரச்சினைகள் தீர்க்கப் பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. சுற்றுச் சூழல் பாதிப்புகளுக்காக எந்த ஆய்வு களும் மேற்கொள்ளப் படவில்லை. ஆனால், அதற்குள் திட்டதிற்காக உச்ச அமைப்பு உருவாக்கப்பட்டு, கம்பெனியும் தொடங்கப் பட்டு, திட்டம் முடுக்கிவிடப் பட்டுள்ளது.

தேசிய கண்ணோட்ட திட்ட ஆவணத்தில் தீவுகளை நவீனப்படுத்துவதற்கும் முக்கியமாக வணக மயமாக்குவதற்கும் கடற்கரை ஒழுங்குமுறை அறிவிப் பாணையின் கீழுள்ள விதிமுறைகள் இடைஞ்சல்கள் உள்ளதாகவும் கூறுவது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. (பக்கம் 281)

சாகர்மாலா திட்டம், கடல், கடற்கரைகள், கடற்கரை சமூகத்தினர், உள்நாட்டு நீர்நிலைகள் மற்றும் மீனவர்களை தேவையற்றவர்களாகவே கருதுகின்றது.

இத்திட்டத்திற்காக மோடியும் கார்ப்பரேட்டு களும் காணும் பெருங்கனவுகளுக்காகவும் மீனவர்கள் பலி கொடுக்கப்படுபவர்களாகவே உள்ளனர் என்பது ஆவணத்தை மேலோட்டமாக படித்தாலே புரியவரும்.

**தேசிய கண்ணோட்ட திட்ட ஆவணத்தில் தீவுகளை நவீனப்படுத்துவதற்கும் முக்கியமாக வணக மயமாக்குவதற்கும் கடற்கரை ஒழுங்குமுறை அறிவிப் பாணையின் கீழுள்ள விதிமுறைகள் இடைஞ்சல்கள் உள்ளதாகவும் கூறுவது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.**

பிள்ளையாரை முன்பு உடைச்ச மாதிரி இப்ப உடைக்க முடியுமா? ராமனை செருப்பால் அடிச்ச மாதிரி இப்போ அடிக்க முடியுமா? என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நமது எதிர் வினாக்கள்.

1. முன்பு உங்கள் மக்களைப் பார்த்து, பஞ்சமன், சூத்திரப்பயலே தள்ளிப்போடா என்று சொன்னீர்களே! இப்போது அது மாதிரி சொல்ல முடியுமா?

2. எங்கள் மக்களைத் தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம் என்று சொன்னீர்களே! இப்போது சொல்ல முடியுமா?

3. முன்பு நாங்கள் தொட்ட பொருளைத் தண்ணீர் தெளித்து எடுத்துச் செல்வீர்களே! இப்போது அது மாதிரி செய்ய முடியுமா?

4. முன்பு பஞ்சமன், சூத்திரனுக்கு எதைக்கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே என்று சொன்னீர்க்ளே! இப்போது சொல்ல முடியுமா?

5. முன்பு தவம் இருந்த சம்புகனின் சிரம் கொய்தீர்களே! இப்போது அதுபோலச் செய்ய முடியுமா?

6. முன்பு ஏகலைவன் கட்டைவிரல் வாங்கியதுபோல இப்போது கட்டை விரலை வாங்க முடியுமா?

7. முன்பு தமிழன் கட்டிவைத்த சத்திரத்துச் சாப்பாடு பார்ப்பானுக்கு மட்டும்தான் என்று தின்று கொழுத்தீர்களே! இப்போது அப்படித் தின்று தீர்க்க முடியுமா?

8. முன்பு எங்களைக் காலில் செருப்பணியாதே என்று சொன்னீர்களே! இப்போது சொல்ல முடியுமா?



9. முன்பு எங்களைத் தோளில் துண்டு போடாதே என்று சொன்னீர்களே! இப்போது அதுபோல் சொல்ல முடியுமா?

10. முன்பு எங்களைத் தெருவில் நடக்காதே என்று சொன்னீர்களே! இப்போது அதுபோல் சொல்ல முடியுமா?

11. முன்பு எங்களை முழங்காலுக்குக் கீழ் வேட்டி அணியாதே என்றீர்களே! இப்போது அப்படிச் சொல்ல முடியுமா?

12. முன்பு எங்களைக் குடைபிடிக்காதே என்று சொன்னீர்களே! இன்று அப்படிச் சொல்ல முடியுமா?

13. முன்பு ஆர்.எஸ்.எஸ்.தோன்றிய மராட்டியத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் கால் பட்டால் தீட்டு என்று அவர்கள் நடந்த தடத்தை அழிக்க விளக்குமாற்றைக் கட்டி நடக்க வைத்தீர்களே! இப்போது அவ்வாறு செய்ய முடியுமா?

14. முன்பு தீண்டத்தகாதவர் எச்சில் துப்ப, கழுத்திலே கலயத்தைக் கட்டிக் கொண்டு நடக்க வைத்தீர்களே! அதுபோல இப்போது செய்ய முடியுமா?

15. திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஒவ்வொரு சாதிக்காரனும் நம்பூதிரிக்கு இவ்வளவு அடி தூரத்தில்தான் நின்று பேச

# பெரியார் பெரும்படை

வேண்டும் என்று சொன்னீர்களே! இன்று அவ்வாறு சொல்ல முடியுமா?

16. முன்பு எங்கள் பெண்கள் மேல்சட்டை அணியக்கூடாது என்று சொன்னீர்களே! இன்று அவ்வாறு சொல்ல முடியுமா?

17. முன்பு எங்கள் தாய்மார்கள் மேலாடை அணிந்தால் மார்பக வரி போட்டீர்களே! இன்று அதுபோல் வரி போட முடியுமா?

18. எங்கள் முன்னோர் தலைமுடி வளர்த்தால், முண்டாசு கட்டினால் அதற்கெல்லாம் வரி போட்டீர்களே! அதுபோல இப்போது வரி போட முடியுமா?

19. முன்பு எங்கள் பிள்ளைகளுக்கு மங்களகரமான, உயர்வான பெயர் வைக்கக் கூடாது என்று சொன்னீர்க்ளே! இன்று அவ்வாறு சொல்ல முடியுமா?

20. முன்பு சீரங்கம் போன்ற கோயில்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைய அனுமதி இல்லை என்று போர்டு வைத்தீர்களே இப்போது அப்படி வைக்க முடியுமா?

21. முன்பெல்லாம் படிப்பு எங்களுக்கு மட்டும்தான் வரும். உனக்கெல்லாம் வராது என்று சொன்னீர்களே! இப்போது அப்படிச் சொல்ல முடியுமா?

22. எங்களுக்கு மட்டும்தான் தகுதி திறமை இருக்கு. உங்களுக்கு இல்லேன்னு சொன்னீங்களே! இப்போது அப்படிச் சொல்ல முடியுமா?

23. முன்பு குலக்கல்வித்திட்டம் கொண்டு வந்து வண்ணான் பிள்ளை துணிதான் வெளுக்கணும், நாவிதன் பிள்ளை முடி வெட்டணும் என்று சொன்னீர்களே! இப்போது அப்படிச் சொல்ல முடியுமா?

24. இவன் குயவன் மண்பாண்டம் செய்கிறான். இவன் வண்ணான் துணி வெளுக்கிறான். இவர் ஐயர் மிகவும் நல்லவர். பாடம் படிக்கிறார் என்று பள்ளிப்பாடம் வைத்தீர்களே! இப்போது அப்படிச் சொல்ல முடியுமா?

25. ராஜாஜி சொன்னது போல உங்கள் பிள்ளைகளை உயர் படிப்பு படிக்க வைக்காதீங்க. குலத்தொழிலைக் கற்றுக் கொடுங்கள் என்று சொல்ல முடியுமா?

26. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதுக்குன்னு முன்பு சொன்னீங்களே! அதுபோல இப்போது சொல்ல முடியுமா?

27. முன்பு கணவனை இழந்த பெண்ணை சதி என்ற பெயரால் உயிரோடு கொளுத்தினீர்களே! அதுபோல் இப்போது கொளுத்த முடியுமா?

28. முன்பு எட்டு வயதுக்குள் திருமணம் செய்ய வேண்டும் என்று குழந்தைத் திருமணத்தைச் செய்து வைத்தீர்களே! இன்று அதுபோலச் செய்ய முடியுமா?

29. அன்று விதவைப் பெண்களை வெள்ளைப்புடவை உடுத்தி மூலையில் உட்கார வைத்தீர்களே அதுபோல இன்று செய்ய முடியுமா?

30. முன்பு கன்னிகாதானம் என்ற பெயரால் பெண்ணையே தானமாகப் பெற்றீர்களே! அதுபோல் இன்று செய்ய முடியுமா?

31. தேவதாசி முறையை ஆதரித்த நீங்கள் அதனை மீண்டும் கொண்டுவருவோம் என்று உங்களால் துணிச்சலாகச் சொல்ல முடியுமா?

32. பெண்களுக்கு பெற்றோர் சொத்தில் பங்கு இல்லை என்று வெளிப்படையாகச் சொல்ல முடியுமா?

33. முன்பு மன்னர்களை ஏமாற்றி ஊர்களையே தானமாகப் பெற்றீர்களே! இன்று அதுபோல் ஏமாற்ற முடியுமா?

34. ஐந்து வயது பார்ப்பனப் பொடியன் 60 வயது முதியவரை 'டேய் குப்பா', டேய் முனியா'ன்னு கூப்பிட்டானே! இப்போ அப்படி கூப்பிட முடியுமா?

35. இவை எதுவும் கூட வேண்டாம். உங்கள் திட்டமான மனுதர்மத்தை இந்திய அரசியல் சட்டத்துக்குப் பதிலாக மீண்டும் கொண்டு வருவோம் என்று வெளிப்படையாகச் சொல்ல முடியுமா?

இப்படி அடுக்கடுக்கான வினாக்களை எங்களாலும் தொடுக்க முடியும். இந்தக் கொடுமைகளையெல்லாம் எதிர்த்து தந்தை பெரியார் போராடியபோது அதற்கு எதிராக பிள்ளையாரையும் ராமனையும் நீங்கள் கொண்டு வந்ததால்தான் பிள்ளையாரை உடைத்தார் பெரியார். ராமன் படத்தை எரித்தார். பெரியாரின் உழைப்பால் பலன் பெற்ற மக்கள் அவருக்கு ஆதரவாக இருந்தனர்.

இன்று அதனையெல்லாம் மக்கள் மறந்துவிடு வார்கள் என்பதால் பக்தியைக் காட்டி மக்களை ஏய்க்கப் பார்க்கிறீர்கள். அதற்கெல்லாம் மக்கள் ஏமாற மாட்டார்கள். ஏமாறப்போவது நீங்கள்தான் என்பது திண்ணம்.! பெரியார் பெரும்படை அதனை முறியடிக்கும்.

**ஆறுமுகம்,** திருச்சி.

# அந்நியர்களாக்கப்படும் இந்தியர்கள்?

1. மக்கள் தொகை கணக்கெடுப்பு NPR - National Population Register.

ஏப்ரல் ஒன்றாம் தேதி முதல் துவங்கும்

கணக்கெடுப்பவர் சில எளிய கேள்விகளைக் கேட்பார்.

உங்கள் பெயர்?, குடும்ப உறுப்பிவர்கள் விவரம்? எண்ணிக்கை? நீங்கள் பிறந்த ஊர்? உங்கள் பெற்றோர் பிறந்த ஊர், ஆதார், ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அட்டை விவரம் போன்ற எளிய கேள்விகள் மட்டும்.

2. என் பி ஆர் முடிவில் "D" என்ற குறியீடு.

என் பி ஆரில் சேகரிக்கப்பட்ட விவரங்களில் ஏதேனும் ஆவணப் பிழையோ அல்லது சரியான விவரம் அளிக்க முடியாத குடும்ப நபர்களின் பெயருக்குப் பின்னால் "D" தாவது Doubt full (சந்தேகத் திற்கு உரியவர்) என்ற அடையாளம் இடப்படும் (ஆதாரில் எழுத்துப்பிழை, ஓட்டர் ஐடியில் பிழை, பெற்றோர் பிறந்த ஊர் தகவல் தெரிவிக்க முடியா தவர்கள் இதுபோன்ற காரணங்களால்) "D" யாருக்கு குறிக்கப் படுகிறது என்பது நமக்குத் தெரியப்படுத்தப் படாது. தகப்பனை விடுத்து மகனுக்கோ, மகனை விடுத்து தகப்பனக்கோ அல்லது தாய் மகளுக்கோ "D" குறிக்கப் படலாம்.

குறிப்பு இந்து, முசுலீம், கிறித்தவர் என யாருக்கு வேண்டுமானாலும் இந்த "D" குறியீடு செய்யப்படலாம்.



3. என் ஆர் சி. தேசிய மக்கள் தொகைப் பதிவேடு.

என் பி ஆர் முடிவில் யாருக்கெல்லாம் டி குறியிடப் பட்டதோ அவர்களுக்கு சில மாதங்களில் ஒரு கடிதம் வரும். அதில் நீங்கள் இந்தியக் குடிமகன் என்பதை நிரூபிக்க ஆவணத்துடன் வரவும் என்றிருக் கும்.

இங்கே உங்கள் ஆதார் அட்டையோ, ஓட்டர் ஐடியோ, ரேசன் அட்டையோ எதுவும் செல்லவே செல்லாது. இங்கே நீங்கள் சமர்ப்பிக்க வேண்டியது உங்கள் பிறப்புச் சான்றிதழ் அல்லது 30 ஆண்டுகளக்கு முன் நீங்கள் வாக்களிக்கப் பயன்படுத்திய வாக்காளர் அடையாள அட்டை. அல்லது 30 ஆண்டுகளுக்கு முன் பிருந்து வரும் சொத்துப் பத்திரம் அதுவும் சம்பந்தப் பட்ட நபர் பெயரில் இருத்தல் வேண்டும்.

இதிலும் தங்களின் குடியுரிமையை நிரூபிக்க முடியா தவர்கள் அடுத்த நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

4. வெளிநாட்டவர் தீர்ப்பாயம் Foreigners Tribunal

இங்கே இறுதி வாய்ப்புத் தரப்படுகிறது. நீங்கள் அயல்நாட்டைச் சேர்ந்தவரா இல்லையா என்பதை நிரூபிக்க வேண்டும். (அதாவது இந்திய குடியுரிமை இழந்துவிட்ட நிலை ஏற்பட்டுவிட்டது)

CAA Citizenship (Amendment) Act, 2019 இந்தியக் குடியுரிமை (திருத்தச்) சட்டம் 2019) அதாவது பரம் பரை பரம்பரையாக இந்தியாவிலேயே பிறந்து வாழ்ந்து வந்தவரானாலும் மேலே சொன்ன படிகளின் படி தங்கள் குடியுரிமையை நிரூபிக்க முடியாத (முஸ்லீம் களைத் தவிர) பிற மதத்தினர் தாங்கள் இந்தியர் என்று நிரூபிக்க முடியாததால், பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் போன்ற ஏதேனும் ஒரு நாட்டில் இருந்து அகதியாக இந்தியாவிற்குள் நுழைந்ததாக அறிவிக்க வேண்டும். அதற்கான சான்றை இந்தத் தீர்ப்பாயத்திடம் பெற வேண்டும். இன்றைய இந்தியக் குடிமகனின் உண்மை நிலை இதுதான்.

5. அகதிகள் சிறைச்சாலை Detention Camp

மேலே சொன்ன எந்த விதத்திலும் (இந்தியனாக இருந்தும்) இந்தியன்தான் என்று நிரூபிக்க முடியாத பலகோடி மக்கள் இந்தச் சிறையில் தள்ளப்படுவார்கள்.

என்பிஆர், என்ஆர்சி, சிஏஏ சட்டங்கள் ஏதோ முசுலீம் மக்களுக்கான சட்டம் என்று கருதிவிடா தீர்கள். இந்தச் சட்டங்கள் மூலம் அசாம் மாநிலத்தில் மட்டும் 15 லட்சம் இந்து மக்கள் தங்கள் குடியுரிமையை இழந்து தவித்து வருகிறார்கள்.

தேசத்தின் ஒற்றுமையை சீர்குலைக்க சதி செய்ப வர்களின் சூழ்ச்சியை ஒன்றிணைந்து முடியடிப்போம். முதல்படியிலேயே கிள்ளி எறிவோம்.

நன்றி : **வினீத் புலனம்** பதிவு.

# வழிகாட்டுவோம்

துள்ளியெழும் கதிரவனால் துயில்களைவோம்
துன்பமெனும் துயர்துடைத்து இன்புறுவோம்
பள்ளிகளில் பாடங்களைத் பகுத்தறிவோம்
படித்து அதன் வழிநடந்து பயன்பெறுவோம்
உள்ளமதில் இருளகற்றி ஒளிபெறுவோம்
உண்மையுணர் மனந்தெளிந்து உறவுகொள்வோம்
கள்ளமிலா வாழ்வமைத்து களிப்புறுவோம்
காலமதைப் பொன்னாக்கிச் செயல்புரிவோம்

அறிவு எனும் அகலேற்றி இருள்நீக்குவோம்
அன்புகொண்டு நண்பர்களை வழிநடத்துவோம்
அறம்பொருள் இன்பமெனும் நெறிபோற்றுவோம்
அன்றாட வாழ்வுகளாய் நெறிப்படுத்துவோம்
புறங்கூறல் தவறுயெனப் புரியவைப்போம்
புன்னகையால் பிறர்மனத்தைக் கவர்ந்திழுப்போம்
நிறவெறிகள் களைந்தெறிய நிமிர்ந்து நிற்போம்
நெஞ்சத்தில் வீரத்தை நிலை நிறுத்துவோம்

விடியல்தனைக் காணநாமும் விழித்தெழுவோம்
விவேகமுடன் செயல்புரிந்து வெற்றிபெறுவோம்
துடித்தெழுந்து பணிமுடித்து துயர்துடைப்போம்
தூங்காமல் விழிப்புடனே உழைத்துயர்வோம்
படிப்படியாய் வாழ்வுயர வழிதேடுவோம்
பலர்வாழத் துணைபுரிந்து நாம்வாழ்வோம்
இடித்துரைத்துத் தவறுகளைத் திருத்திடுவோம்
எல்லாரும் நலம்வாழ வழிகாட்டுவோம்

கவிஞர். இராமன், சென்னை


## விளம்பரக் கட்டண விபரம்

**முன்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**
**பின்னட்டை உள்ளே ரூ.** 7,000/- **(முழுப்பக்கம்)**
**பின்னட்டை ரூ.** 10,000/- **(முழுப்பக்கம்)**
**கருப்புவெள்ளை ரூ.** 5,000/-

1964ஆம் ஆண்டு கரூர் வந்த பெரியார் அவர்களைக் காண ஒரு பார்ப்பனர் வந்தார். பூணூலை மறைக்க ஒரு துண்டைப் போர்த்திக் கொண்டு வந்தார். அவரைக் கண்ட தொண்டர்கள் ஆவேசப்பட்டு, "உனக்கென்னய்யா இங்கே வேலை" என்று கேட்க, "நான் ராமசாமி நாயக்கரைப் பார்க்கணும். அதுதான் வேலை" என்று கூற, "அதெல்லாம் பார்க்க முடியாது நீங்கள் திரும்பிப் போங்கள்" என்று பேசிக்கொண்டது பெரியார் காதில் விழுந்தது.

வெகுண்டு வெளியே வந்த பெரியார், நடந்ததைப் புரிந்து கொண்டு, தன் தோழர்களை அழைத்து "ஏனப்பா நீங்கள் எல்லாம் சுயமரியாதைக் கார்கள்தானா? ஒருவர் நம்மைத் தேடி வந்தால் அவரை அழைத்து உபசரிக்க வேண்டாமா? இப்படி நீங்கள் செய்வதால் நம் கொள்கைக்கு எவ்வளவு பெரிய இழுக்கு தெரியுமா? தனிப்பட்ட எந்த ஒரு பார்ப்பனரும் நமக்கு எதிரி கிடையாது" எனக் கண்டிப்பு காட்டி விட்டு, பார்ப்பனரிடம் நடந்ததற்கு மன்னிப்புக் கேட்டு உள்ளே அழைத்து வந்த விபரம் கேட்டார்.

வந்தவர் "நாயக்கர்வாள் எனக்கு வயது 65. மனைவி இறந்து விட்டாள். பிள்ளைகள் கிடையாது. எங்கள் வீடு அகலம் 64அடி. அதில் என் அண்ணன் பங்கு 32 அடி. அவன் அதை உங்கள் கட்சிக்காரருக்கு விற்று விட்டான். வாங்கிய உங்கள் தொண்டர் கொல்லைப்பக்கம் வேலியைக் கொஞ்சம் கொஞ்சமாக நகர்த்தி, இப்போது எனக்கு வெறும் 2அடி மட்டுமே உள்ளது.

வயதான இந்தக் காலத்தில் அவசரமாக என்னால் கழிவறைக்குக் கூட போக முடியவில்லை. நான் ஓய்வுபெற்ற ஆசிரியன். எனக்கு பென்சன் மாதம் 6 ரூபாய்தான் கிடைக்கிறது. உங்களிடம் சொன்னால் நல்லது செய்வீர்கள் என்று என் உறவினர் ஒருவர் சொன்னார். அதுதான் வந்தேன்" என்றார்.

இதைக்கேட்டு வேதனைப்பட்ட பெரியார், தொண்டர்களிடம் "யாரப்பா அந்த அயோக்கியன்" என்று கேட்டார்.

"ஐயா இன்று நடக்கப்போகிற இந்தக் கூட்டமே அவர் ஏற்பாடுதான்" என்றனர். அவரைக் கூட்டி வாருங்கள் என்றார் பெரியார். அந்தத் தோழர் வந்து நின்றவுடன் பெரியார் அவர்கள், அவரிடம் "நீங்க நாளைக்கே வேலியை அவிழ்த்துக் கட்டி, அவருக்கு 32 அடி கொடுக்கணும். அதிலுள்ள மரம் எதையும் வெட்டக் கூடாது. அவருக்கு ஒரு பைசா செலவு வைக்கக்கூடாது. எந்த ஒரு சாக்குப்போக்குச் சொல்லியும் இந்தக் காரியத்தை தள்ளிப் போடக்கூடாது. போ.." என்றார்.

பத்து நாட்கள் கழித்து அந்தப் பார்ப்பனர், சென்னை சென்று, பெரியார் அவர்களுக்கு கூடை நிறையப் பழங்கள் வாங்கிக் கொண்டு, நேரில் பார்த்து நன்றி கூறினார்.

பழங்களை வாங்க மறுத்த பெரியார், "நீங்கள் செய்தது தவறு. தப்பு செஞ்சவன் என் கட்சிக்காரன். அதற்கு ஏன் நீங்கள் எனக்குப் பழம் தரணும்? இது போன்ற செயல்களால்தான் லஞ்சம் ஆரம்பமாகிறது.

நீங்கள் நன்றி சொல்ல ஒரு அஞ்சலட்டை போதுமே? உங்கள் 6 ரூபாய் வருமானத்தில் ரயில் வண்டிக்கு 3 ரூபாய், இந்தப் பழங்கள் 20 ரூபாய் இருக்கும். இப்படிச் செய்யலாமா?" என்று சொல்லி அவருக்கு 30 ரூபாய் கொடுத்து, வாசல் வரை வந்து அனுப்பியவர். அவர்தான் பெரியார்.

**வி.உ.இளவேனில்**



சிறுகதை

# ஒரு பூவின் சோகம்

ஒரு ஊரில் ஒரு அழகான குட்டிப் பூக்கடை இருந்தது. அந்தக் குட்டிப் பூக்கடையில் நிறைய பூச்செடிகள் இருந்ததாம். அக்கடையில் ரோசா செடிகள் அதிகம் இருந்ததாம். அந்தக்கடை வழியா ஒரு காவல்காரர் வருகிறார். அந்தக் காவல்காரருக்கு குட்டிப் பூக்கடையில் இருந்த ரோசாச் செடிகளைப் பார்த்து ஆசை வந்தது.

அக்கடையில் இருந்த ரோசாச் செடிகளில் ஒன்றை காவல்காரர் காசு கொடுத்து வாங்கினார். அந்தப் பூச்செடியை கொண்டு வந்து, தன்வீட்டிற்கும் பக்கத்து வீட்டிற்கும் இடையில் நட்டு வைத்து வளர்த்தார். ஒவ்வொரு நாளும் அதற்கு நீர் ஊற்றி, களை பறித்து, வளர்த்து வந்தார். இவரது செயல்பாடுகளை பக்கத்து வீட்டுக்காரர் நாள்தோறும் நோட்டம் விட்டுக் கொண்டே இருந்தார். சில நாட்களில் அந்தச் செடி வளர்ந்து பூ பூக்கத் தொடங்கியது. அந்தப் பூ மிக அழகாக இருந்தது. நறுமணமும் வீசியது.

காவல்காரர் நாள்தோறும் அந்தப் பூச்செடியைப் பார்த்து மகிழ்ந்து புன்னகை செய்வார். அதையும் அந்தப் பக்கத்து வீட்டுக்காரர், காவல்காரருக்குத் தெரியாமல் பார்ப்பார். என்னடா இவன், செடிக்கிட்ட வரான், சிரிக்கிறான், அதோட கொஞ்சுறான் அப்படி என்ன அந்தச் செடியில் இருக்கிறது என்று எண்ணினான்.

காவல்காரர் இல்லாத நேரத்தில் அந்தச் செடியின் அருகில் வந்து அச்செடியைப் பார்த்தார் பக்கத்து வீட்டுக்காரர். அதைப் பார்த்துக் கொண்டிருந்த போதே அச்செடியின் அழகில் அவரும் மயங்கினார். அவருக்குள் ஒரு மகிழ்ச்சி நிறைந்து நின்றது. இந்தச் செடி நம் வீட்டில் இருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணி, அக்கம் பக்கம் பார்த்து, யாரும் இல்லாதபடியால், அச்செடியை வேருடன் பிடுங்கிக் கொண்டுபோய் தன் வீட்டுத் தோட்டத்தில் நட்டு வைத்துக் கொண்டார்.

இரவில் வீடு திரும்பிய காவல்காரர் வேலை அசதியில் தூங்கிப் போய்விட்டார். காலையில் எழுந்ததும் தான் ஆசையாய் வளர்த்து வருகிற ரோசாச் செடியைப் பார்த்தார். நட்டு வைத்த



இடத்தில் அந்தச் செடி இல்லை. அவரது முகம் வாடிப் போய்விட்டது. வாடியது மட்டுமல்லாமல் கண்களில் இருந்து கண்ணீர் வெளிவரத் தொடங்கி விட்டது. ஆடுமாடுகள் சாப்பிட்டு விட்டதா, யாரும் எடுத்துக் கொண்டுபோய் விட்டார்களா என்று அவரது கண்கள் தேடின. பக்கத்து வீட்டில் அவரது பார்வை போனபோதுதான் தெரிந்தது அங்கே அந்தச் செடி அவரைப் போலவே வாடி நின்றது. அவருக்கு விபரம் புரிந்தது. பக்கத்து வீட்டுக்காரர் தனது செடியை திருடி, தன்னோட தோட்டத்தில் நட்டு வைத்திருக்கிறார் என்று புரிந்தது.

காவற்காரர் சினத்தோடு பக்கத்து வீட்டுக்குச் சென்று அவரிடம் சண்டை போட்டார். அவரோ, இது உன்னோட செடி அல்ல. என்னுடைய பூச்செடி என்றார். காவல்காரர் நியாயத்தைப் பேசிப் பார்த்தார் ஆனால் பக்கத்து வீட்டுக்காரர் பூச்செடி எனக்குச் சொந்தம் என்று பிடிவாதம் பிடித்தார். ஆகவே, காவற்காரர் பஞ்சாயத்துத் தலைவரிடம் புகார் கொடுத்தார். பஞ்சாயத்தார்கள் விசாரணை செய்தார்கள். அப்போது, பக்கத்து வீட்டுக்காரர், பஞ்சாயத்தார்களிடம், அந்த பூச்செடி எங்கிருக்கிறது என்று வந்து பாருங்கள். அது என்னுடைய இடத்தில் இருக்கிறது. அது என்னுடையதுதான் என்றார். பஞ்சாயத்தார் நேரில் வந்து பூச்செடியைப் பார்த்து விட்டு, பக்கத்து வீட்டுக்காரர் நிலத்தில்தான் பூச்செடி இருக்கிறது ஆகவே, பக்கத்துவீட்டுக்காரருக்குத்தான் பூச்செடி சொந்தம் என்று தீர்ப்புக் கூறிவிட்டுச் சென்று விட்டார்கள்.

காவற்காரர் சோகத்துடன் தன் வீட்டிற்குச் சென்று விட்டார். காவல்காரர் பூச்செடியைப் பராமரித்தது போல் பக்கத்து வீட்டுக்காரர் செடியைப் பராமரிக்க வில்லை. ஆகவே, ரோசாச்செடி மிகவும் கவலை அடைந்தது. என் வாழ்க்கை ஏன் இப்படி ஆகிவிட்டது என்று கண்ணீர்விட்டது. நான் காவல்காரரின் பராமரிப்பில் இருந்தபோது மகிழ்ச்சியாக இருந்தேன். இங்கே வந்து துன்பப்படுகிறேன் என்று அழுதது. திடீரென்று ஒரு நாள் அந்த ரோசாச் செடிக்கு முன் கடவுள் வந்து நின்றார். கடவுள் ரோசாச் செடியிடம் நீ ஏன் அழுகிறாய் என்று கேட்டார். அதற்கு ரோசாச் செடி சொன்னது, “நான் முதலில் இருந்த இடத்திற்கு என்னைக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுங்கள். அங்கிருந்தால் நான் மகிழ்ச்சியாய் இருப்பேன் என்றது.“

ரோசாச் செடி முதலில் இருந்த இடத்திற்கு என்னை கொண்டுபோய்ச் சேர்த்து விடுங்கள் என்று சொன்ன தல்லவா? கடவுள் அச்செடியை எங்கே கொண்டு போய் சேர்த்திருப்பார் உங்களால் சொல்ல முடியுமா?

நிறையபேர் சொல்வார்கள், காவல்காரர் வீட்டில் தான் அச்செடியை கடவுள் கொண்டுபோய்ச் சேர்த்தி ருப்பார் என்று. அதல்ல, முதலில் அச்செடி இருந்த குட்டிப் பூக்கடையில்தான் கடவுள் அந்தச் செடியை கொண்டுபோய்ச் சேர்த்தார். ரோசாச் செடி தனது நண்பர்களுடன் மகிழ்ச்சியாக இருந்தது. தன்னை சரியான இடத்தில் கொண்டுவந்து சேர்த்த கடவுளுக்கு ரோசாச்செடி நன்றி கூறியது. கடவுளிடம் நாம் வேண் டிக்கொள்வது எதுவோ அதை அவர் நிறைவேற்று வார்.

***சி.லோகநாயகி***

## தன்மான யானை

மாடு கட்டி போரடித்தால்
மாளாது செந்நெல் எண்றெண்ணி
என்னையும் கட்டி
போரடித்த வேளையில்
வேலைநிறுத்தம் செய்தேனா?

பளு தூக்கி வருமுன்னே
துதிக்கையால் மரம் தூக்கி
அழகாய் அடுக்கி வைத்து
ஆற்றில் மிதக்கவிட்டேனே
சம்பள உயர்வு கேட்டேனா?

ஆலயவாசலில்
வேடிக்கை சிறார்
தலைதடவிய
ஆசீர்வாதக் காசில்
எனக்கொரு பங்கென
உரிமைக் குரல் எழுப்பினேனா?

இனியஎஜமானபாகனே
கனிவாய் ஒரு வேண்டுகோள்
கள்ள முதலாளிகளிடம்
பிச்சைக்காசுப் பெற
கடைத்தெருவிற்கு

அழைக்காதே என்னை
தன்மான யானை
நான் சொல்கிறேன்
மானமுள்ள மனிதனாயிரு!

**இளந்தேவன்**
திருச்சி.

# பஹரைன் நாட்டில் குடியிருக்கும்

## தமிழரின் முகநூல் பதிவு!

இஸ்லாமிய நண்பர்கள் யாராவது எனக்கு அராபிய நாட்டில் குடியுரிமை வாங்கித் தர முடியுமா? என்று செல்வம் யாதவ் என்ற ஒரு நண்பர் கிண்டலாக முகநூலில் ஒரு பதிவு செய்திருந்தார்.

நண்பரே! நான் பஹ்ரைன் நாட்டில் கடந்த 42 ஆண்டுகளாக வசித்து வருபவன். உங்களுடைய இந்தக் கேள்விக்கு நான் வசிக்கும் இந்த இஸ்லாமிய நாட்டை வைத்து உங்களுக்கு உதாரணம் காட்ட முடியும். நான் சொல்வது உண்மையா இல்லையா என்பதை இங்கு வசிக்கும் என் தொப்புள் கொடி உறவுகள் அனைவரும் சாட்சி கூறுவார்கள்.

பஹ்ரைன் நாட்டு பிரஜைகளாக மாறிய எண்ணற்ற இந்து சகோதரர்களை இங்கு நாம் காண முடியும். அரபு நாட்டவர் 15 ஆண்டுகள், மற்றும் அரபு மொழியை தாய்மொழியாக கொள்ளாதவர்கள் 25 ஆண்டுகாலம் இங்கு வசித்தால் குடியுரிமைக்காக விண்ணப்பிக்கலாம்.

கேவல்ராம், பாட்டியா, கஜ்ரியா, சோனி (குஜராத்தி பொற்கொல்லர் வகுப்பினர்) போன்ற குடும்பத்தினர், ஹிந்து தட்டாய் சமூகத்தைச் சேர்ந்தவர் இங்கு பல காலமாக வசித்து வரும் இன்னும் பல குடும்பத்தினர் இங்கு பஹ்ரைன் பிரஜைகளாக குடியுரிமை பெற்று அனைத்து சலுகைகளும் பெற்று மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்.

பஹ்ரைன் கடவுச்சீட்டு பெற்ற பாகிஸ்தானிய கிறித்துவர்கள், இந்திய தமிழர்களும் உண்டு. குடியுரிமைக்கு விண்ணப்பித்து கிடைக்காத இந்திய முசுலீம்கள் உண்டு. குடியுரிமை பெற்ற இந்திய இந்துக்கள் உண்டு. இந்நாட்டு அரசாங்கம் மத பாகுபாடு பார்ப்பதில்லை.

இங்கு நிரந்தர குடியுரிமை பெற்ற கேரளம் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்து சகோதரர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். (பெயர் குறிப்பிட விரும்பவில்லை. இதைப் படிக்கும் இங்குள்ள தமிழன்பர்களுக்குப் புரியும்)

நெடுஞ்சாலைகளில் அடுத்தடுத்து மசூதிகளையும் உயர்ந்து எழுப்பப்பட்டிருக்கும் கிறித்தவ தேவாலயங்களையும் காணலாம். இங்கு சுகி சிவம் அவர்கள் வந்த போது "நோன்பு காலங்களில் இசுலாமிய நாடுகளில்



இந்துக்கள் ஒளிந்து ஒளிந்து கழிவறையில் மறைந்து தான் உணவருந்த வேண்டும் என்று ஒரு பிரசங்கத்தில் கூறினீர்களே, இங்குள்ள இந்து முசுலீம் ஒற்றுமையைப் பாருங்கள். இதுதான் இங்குள்ள உண்மை நிலை" என்று விளக்கிச் சொன்னேன். "எனக்குத் தரப்பட்ட தவறான தகவல் அது. அதற்காக வருந்துகிறேன்" என்று உயர்ந்த மனப்பான்மையோடு அவர் கூறியது மகிழ்வைத் தந்தது.

ஐயப்பன் கோயில் (மூன்று), ஹரே ராமா ஹரே கிருஷ்ணா கோயில் (5 பிரிவுகள்), குருவாயூரப்பன் கோயில் (இரண்டு), ஆஞ்சயேர் கோயில், காளி கோயில், ஷிர்டி சாய்பாபா கோயில், புட்டபர்த்தி சாய்பாபா கோயில், மாரியம்மன் கோயில், சிவன் கோயில், முருகன் கோயில் (இரண்டு), குருத்வாரா சீக்கிய கோயில் (இரண்டு) உள்ளன. 200 ஆண்டு பிரம்மாண்டமான கிருஷ்ணன் கோயில் இங்குள்ள முன்னால் அரசர் தானமாக கொடுக்கப்பட்ட இடத்தில் எழுப்பப் பட்டுள்ளது.

யூதர்களுக்கும் இசுலாமியர்களுக்கும் ஏழாம் பொருத்தம் என்பதுபோல்தான் ஊடகங்கள் சித்தரிக் கின்றன. 2008 முதல் 2013 வரை பஹ்ரைன் நாட்டின் அமெரிக்கத் தூதராக இருந்தவர் ஹூதா நூனூ. இவர் ஒரு யூதப் பெண்மணி. இங்கு யூதர்களின் வழிபாட்டுத் தளம் இருக்கிறது. யூதர்களுக்கான அடக்கஸ்தலம் (கல்லறை) இந்துக்களுக்கான எரி மயானம் உண்டு.

கிறித்தவ தேவாலயங்கள் ஏறக்குறைய 17 இருக்கிறது. கத்தோலிக், ரோமன் கத்தோலிக், சிரியன் கத்தோலிக், பெந்தேகொஸ்தே, ஃபோர் ஸ்கொயர் சர்ச் இப்படி எல்லா பிரிவினர்களுக்கும் தேவாலயங்களின் தனித்தனியாக உள்ளன. தமிழில் உபதேசங்கள் நடை பெறும் வழிபாட்டுத்தலங்கள் மாத்திரம் சுமார் 6 உள்ளன.

இசுலாமியப் பெண்மணிகள் என்றாலே பிற்போக் கானவர்கள் என்ற ஓர் அபிப்பிராயம் பொதுவாகவே நிலவுகிறது. இங்க கடந்த பொதுத்தேர்தலில் நாடா ளுமன்றத்திற்கு போட்டியிட்ட 293 வேட்பாளர்களில் 41 வேட்பாளர்கள் பெண்கள்.

பஹ்ரைன் நாடு வெறும் 765.3 சதுர கிலோ மீட்டர் கொண்ட மிகச் சிறிய குட்டி நாடு என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**அப்துல் கையூம்.** (வாட்ஸ்அப் பதிவு)

## நம் பூமியின் காந்தப்புலம் எப்படி உருவாகியிருக்கும்? - ஆய்வில் சுவாரஸ்யப் புதிய தகவல்கள்

நம் பூமியில் மேலோடு, நடுக்கவசப் பகுதி, அடியில் உள்ள மையப்பகுதி என்று 3 அடுக்குகள் உள்ளன. இதில் அடியில் உள்ள 'கோர்' என்று அழைக்கப்படும் மையப்பகுதியி லிருந்து தான் பூமியின் ஆதி புவியீர்ப்புக் காந்தப் புலம் தோன்றி யிருக் கும் என்ற ஆராய்ச்சி முடிவின் அடுத்தக் கட்டமாக மேலோடு மற்றும் அடிமையப் பகுதிகளுக்கு இடையில் இருக்கும் நடுக்கவசப் பகுதியான மேண்ட்டிலில் இருந்து பூமியின் ஆதி புவியீர்ப்பு விசை காந்தப் புலம் உருவாகியிருக்கும் என்று புதிய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'எர்த் அண்ட் பிளானட்டரி சயன்ஸ் லெட்டர்ஸ்' என்ற இதழில் வெளியான கட்டுரையின்படி ஸ்கிரிப்ஸ் கடலாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்கள் இந்த ஆய்வை நடத்தியுள்ளனர்.

பூமியின் நடுக்கவசப் பகுதி சிலிகேட் பொருளினால் ஆனது இது பொதுவாக அவ்வளவு நல்ல மின் கடத்தி அல்ல, மோசமான மின் கடத்தி என்றுதான் அறியப்பட்டிருந்தது.

ஆகவே பூமியின் நடுக்கவசப்பகுதியின் கீழே பில்லியன் ஆண்டுகளாக திரவ வடிவம்தான் இருந்தது என்றாலும் கூட திரவத்தின் அதிவிசை ஓட்டம் கூட புவியீர்ப்பு விசை காந்தப் புலத்தை உருவாக்கும் அளவுக்கு பெரிய மின்சாரச் சக்தி கொண்டதல்ல, அதாவது பூமியின் அடியாழ கோர் பகுதியில் இருக்கும் மின் நடவடிக்கை போன்று இல்லாவிட்டாலும் கூட மேண்ட்டில் பகுதியிலிருந்து ஆதிகால புவியீர்ப்பு காந்தப் புலம்உருவாகியிருக்கலாம் என்பதே இந்தக் கண்டுபிடிப்பின் சாராம்சமாகும். ஆய்வாளர்களான ஸ்டெக்மேன், லியா ஸீய்க்லர் மற்றும் நிகோலஸ் பிளாங்க் ஆகியோர் ஆதி பூமியின் மேண்ட்டிலில் புவியீர்ப்பு விசையை உருவாக்கியிருக்கும் தெர் மோடைனமிக்ஸ் குறித்த புதிய கணிப்புகளை வழங்குகின்றனர்.

அதாவது திரவ சிலிகேட் உண்மையில் எதிர்பார்த்ததை விட கூடுதல் மின் கடத்தியாக செயல்பட்டிருக்க வேண்டும் என்கின்றனர்

"இப்போதைக்கு மகா ஒருங்கிணைப்புக் கோட்பாடு எதுவும் எங்கள் இடத்தில் இல்லை, அதாவது வெப்ப ரீதியாக பூமி எப்படி பரிணாமம்அடைந்திருக்கும் என்பதற்கான மகா ஒருங்கிணைபுக் கோட்பாடு எதுவும் எங்களிடத்தில் இல்லை. பூமியின் பரிணாமம் குறித்த புரிதலில் எங்களிடம் எந்த ஒரு கருத்தாக்க சட்டகமும் இல்லை. பூமிக்கவசப்பகுதியான மேண்ட்டிலில் புவியின் ஆதி காந்தப்புலம் தோன்றியிருக்கலாம் என்பது இப்போதைக்கு சாத்தியம் குறித்த ஒரு முற்கோள்தான்.

புவிபவுதிகத் துறையின் மிகவும் ஆணித்தரமான கோட்பாடுஎன்னவெனில் பூமியின் அவுட்டர் கோர் பகுதியில் உள்ள திரவம்தான் காந்தப் புலத்தை உருவாக்கியிருக்கும் என்பதே.


இன்னொரு ஆய்வுக்கட்டுரையில் ஸ்டெக்மான் குழுவின் இந்த ஆய்வைப் பயன்படுத்தி இன்னொரு புவிபவுதிக ஆய்வாளர் ஜோசப் ஓ'ரூர்கே என்பவர் கூறும்போது வீனஸ் கிரகத்தில் ஒருகாலக் கட்டத்தில் உருகிய மேண்ட்டிலில் காந்தப்புலம் உருவாகியிருக்கலாம் என்கிறார்.

பூமி மற்றும் பிற கிரகங்களில் உள்ள திரவ, உலோக மையப் பகுதிகள் வேகமாக சுழன்று காந்தப்புலங்கள் உருவாகியிருக் கலாம் என்கிறார் அவர்.

ஸ்டெக்மான் கோட்பாட்டின் அடிப்படைகள் சரியாக இருந்தால் ஆதி பூமியில் மேண்டிலில்தான் முதல் காந்தப்புலம் உருவாகி யிருக்க வேண்டும்.

# ‘ஆரிய மாயை’ எழுதிய எனக்குச் சிறை! எழுதி ஒன்பதாண்டுகளுக்குப் பிறகு!

## அறிஞர் அண்ணா (சிதம்பரம் உரை, 1951)



“நான் ஒரு புத்தகம் எழுதினேன். அதற்காகச் சிறைச்சாலைக்கு அனுப்பப் பட்டேன். அந்தப் புத்தகத்தின் பெயர் ‘ஆரியமாயை’! அது எழுதப்பட்டது. 1942 இல்! அதற்காக வழக்கு தொடரப்பட்டது.

1950இல புத்தகம் எழுதி ஒன்பது ஆண்டுகள் ஆனபிறகு, ஆறு பதிப்பிலே ஒவ்வொரு பதிப்புக்கும் சுமார் 3000 வீதம் மொத்தம் 18000 புத்தகங்கள் வெளி வந்த பிறகு, அதைச் சுமார் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் படித்த பிறகு, அந்த இலட்சம் மக்களிலும் குறைந்தது 2000பேர் பக்கத்துக்குப் பக்கம் பாராமல் ஒப்பிக்கும் சக்தி பெற்ற பிறகு, அதாவது குதிரை கோவில் பட்டியில் பறிபோய், அது வேலூருக்கு வந்த பிறகு கொட்டிலை இழுத் துப் பூட்டவது போல் நான் எழுதிய புத்தகத்திற்குத் தடை போடு கிறார்கள்.

1942 இல் எழுதிய புத்தகத்திற்கு 1950இல் குற்றம் காண்கி றார்கள். ஒன்பது ஆண்டு காலமாக உண்டாக்காத வகுப்பு துவேசத்தை இப்பொழுமு மாத்திரம் அது எப்படி உண்டாக்கும் என்பது தெரியவில்லை.

‘ஆரிய மாயை’ புத்தகம் எழுதியதற்காக என்னைச் சிறையில் போட்டுவிட்டார்கள். சரி! அதைப் படித்த எண்ணற்ற வாலிபர்களை என்ன செய்யப் போகிறீர்கள்? அவர்கள் இதயத்திலே குடிகொண்டிருக்குமே ‘ஆரிய மாயை’ கருத்துகள் அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

ஒவ்வொரு வாலிபராகக் கூப்பிட்டு “உன் உள்ளத்திலே ஆரிய மாயை கருத்து இருந்தால் அதைக் கக்கு. உன்னுடைய எண்ணங்களிலே ஆரிய மாயைக் கருத்துகள் கலந்திருந்தால் அவற்றை எடுத்து வீசு“ என்று சொல்லப் போகிறீர்களா?

என்னைச் சிறையில் தள்ளிவிட்டார்கள். புத்தகம் எழுதிய குற்றத்திற்காக! அந்தப் புத்தகத்திலே உள்ள கருத்துகளை மனப்பாடம் செய்துவிட்ட எண்ணற்ற வாலிபர்களை என்ன செய்யப் போகிறார்கள்?

‘ஆரிய மாயை’ அவ்வளவு என்ன ஆபத்தான புத்தகமா? வெள்ளைக்காரர்கள் காலத்தில் இல்லாத வகுப்பு துவேசத்தை இப்பொழுது இந்தப் புத்தகம் புதிதாகப் போதிக்கப் போகிறதா? ஒருவர் எழுதிய புத்தகத்தைக் கண்டு அவ்வளவு அச்சமா? அதைப்படித்தால் ஆட்சிப்பீடம் ஆடிவிடும் என்றால், ஆட்சிபீடம் அவ்வளவு பலவீனமானதா? அதை நாட்டிலே உலவ விட்டால் பூகம்பம் ஏற்பட்டுவிடுமா? எழுத்தாளன் பேனாவைத் தொட்டால், சர்க்காருடைய கஜானாவின் சாவி காணாமல் போய்விடுமா? அப்படியொரு கிலி இருக்கலாமா?

பேனா பிடிக்கும் வீரர்கள் உங்களிடம் கிடையாதா? ‘கல்கி’ ஆசிரியருக்கு எழுதத் தெரியாதா? ‘விகடன்’ ஆசிரியருக்குத் தெரியாதா? ‘சுதேசமித்திரன்’ ஆசிரியருக்குத் தெரியாதா?

ஏன் ‘தினமணி’ ஆசிரியர் ஏ.என்.சிவராமனைக் கூப்பிட்டு ‘எடு பேனாவை, இந்தா காகிதம், எழுது ஆரிய மகிமையைப் பற்றி என்று கட்டளையிடலாமே! இதோ ‘ஆரிய மகிமை’ என்று எல்லோருக்கும் காட்டலாமே! தைரியமிருந்தால்! அதையல்லவா செய்திருக்க வேண்டும்.

‘ஆரிய மாயை’ யும் நாட்டிலே உலவட்டும். ‘ஆரிய மகிமை’ யும் நாட்டிலே உலவட்டும். மக்களே நீதிபதிகள். அவர்கள் மனமே உரைகல். பக்கத்துக்குப் பக்கம் இரண்டையும் மக்கள் படிக்கட்டும். அபத்தம் இருந்தால் எடுத்து வீசி எறிந்து விடட்டும். தேவை என்றால் எடுத்துக் கொள்ளட்டும். அதுவல்லவா நேர்மை! நீதி!. அறிவு, ஆண்மை உள்ளவர்கள் செய்ய வேண்டியது அதைத்தானே? அதை விட்டுவிட்டு ‘ஆரியமாயை’ புத்தகத்திற்கு மாத்திரம் தடை போடுவது என்ன நியாயம்?“

நான் லைலா அஹ்மதி, சீனாவிலுள்ள ஸன்ஜான் பல்கலைக்கழகத்தின் மருத்துவ விஞ்ஞான பீடத்தில் இருந்து இதனை எழுதுகின்றேன். அண்மையில் அல்லது பிறகாவது கொரோனா வைரஸ் உலகில் எந்த ஒரு நாட்டு மக்களையும் தொற்றலாம். எத்தகைய சந்தேகமும் இன்றி அந்த நோயை அடையாளம் காணும் வசதிகளோ கருவிகளோ பெரும்பாலான நாடுகளில் இல்லை. எனவே, உங்கள் உடம்பில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்துக் கொள்ள 'முடிந்த அளவு இயற்கையான விட்டமின் C யை' முடியுமான அளவு உட்கொள்ளுங்கள். கவலைப்படாதீர்கள். அதிகமான நோய்களுக்கு அரும் மருந்து, அதுவே சிறந்ததும் கூட. உணவுகளில் அதிகமாக மஞ்சளைச் சேர்த்துக் கொள்வதை உறுதிப்படுத்துங்கள். மேலும், இந்த கொரோனா வைரசுக்கு இதுவரை எந்த குறிப்பிட்ட மருந்துகளோ, தடுப்பு ஊசிகளோ இல்லை.

துரதிருஷ்டவசமாக, மரபணுக்களை மாற்றும் செயற்பாடுகள் காரணமாக இந்த நிலைமையை மிகவும் மோசமாக்கியுள்ளது. பாம்பு, வௌவால் போன்ற பிராணிகளில் மரபணுவை உட்செலுத்த முயன்றபோது இந்த நோய் வெளியானது. இன்று மனிதன் உட்பட எல்லா முலையூட்டல்களிலும் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

உங்களைச் சேர்ந்தவர்கள், நெருங்கியவர்கள் அனைவருக்கும் இந்தச் செய்தியை நீங்கள் கொண்டு செல்வது மிக முக்கியமானது. பெய்ஜிங் இராணுவ வைத்தியசாலையின் பிரதான நிர்வாக உத்தியோகஸ்தரான பேராசிரியர் சென்ஹோரின் அவர்கள் கூறினார்கள். "இளம் சூடான நீரில் தேசிக்காய் (எலுமிச்சை பழம்) துண்டுகளைப் போட்டு அருந்துவது உங்கள் உயிரைக் காப்பாற்றும்".

நீங்கள் பணிபுரிபவராக இருப்பின் இந்தச் செய்தியை வாசித்துவிட்டு மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள்! சூடான தேசிக்காய் பானம் புற்றுநோய்க் கிருமிகளை அழிக்கும்! தேசிக்காயை மூன்று துண்டுகளாக வெட்டி ஒரு கோப்பையில் இட்டு, இளம் சூடான நீரை அதில் இடுங்கள், அதை (அல்கலைன் பானமாக) மாற்றுங்கள். இதை ஒவ்வொரு நாளும் அருந்துவது எல்லோருக்கும் பயன்படும், சூடான தேசிக்காய்ப் பானம் ( எலுமிச்சை பழம்) புற்று நோய்ககான மருந்தாகவும் அமையும். சூடான தேசிக்காய்ப் பானம் புற்றுநோய்க் கட்டிகளைக் குணப் படுத்தவதுடன் எல்லா வகையான புற்றுநோய் களுக்கும் மருந்தாகவும் அமையும். பாதிக்கப்பட்ட கலங்களை இந்தப் பானம் அழிப்பதுடன் ஆரோக்கிய மான கலங்களை அது எந்த வகையிலும் பாதிக்காது.

இரண்டாவது, தேசிக்காய் பானத்தில் உள்ள அமிலங்கள், காபோக்ஸிலிட் அமிலம். உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும், சுருக்கமான இரத்த நாளங்களைப் பாதுகாக்கும். இரத்த ஓட்டத்தைச் சீராக வைக்கும், இரத்தம் உறைவதையும் கட்டுப் படுத்தும்.

இதனை வாசித்துவிட்டு மற்றவர்களுக்கும் இதனைத் தெரிவியுங்கள், உங்களைப் போன்றே அவர்களுடைய உடல் நலத்தையும் பேணுவதற்கு அது உதவியாக அமையும்.



# நோய் கிருமிகளை அழிக்கும் எலுமிச்சை பழம்

அன்பிற்கினிய மீனவ அன்பர்களே...

தேசிய கடல் மீன்வள (ஒழுங்குமுறை மற்றும் மேலாண்மை) மசோதா 2019 விரைவில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட உள்ளது. இந்த மசோதாவில் இடம்பெறும் விதிமுறைகள்:

12 நாட்டிக்கல் மைல் முதல் 200 நாட்டிக்கல் மைல் தூரம் வரையிலான பிரத்யேக பொருளாதார மண்டலத்தைச் சார்ந்தது. இதிலுள்ள விதிமுறைகள் கடலை நம்பி வாழும் நமக்கு பாதுகாப்பாகவும் உதவிக்கரம் நீட்டுபவையாகவும் இருக்க வேண்டும்.

ஆனால், இதில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான சட்டங்கள் மீனவர்களை ஒடுக்கும் முறையிலேயே அமைந்துள்ளன. இந்த மசோதாவை நிறைவேற்றும் முன்பாக மீனவ மக்களின் வாழ்வுக்கு குந்தகம் விளைக்கும் திட்டங்களை நீக்க நாம் வற்புறுத்த வேண்டும்.

மசோதாவில் என்ன இருக்கிறது? ஓகிப் புயலின் போது கடலில் தவித்த 551 மீனவர்களை காணவில்லை என்று உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்ட பின்பு தான் மீனவர்களைத் தேட ஆரம்பித்தது அரசு.

நமது மீனவர்களைப் பலிகொடுக்கக் காரணம் மீட்பு படையினர் கடலையும் கடல்சார் பிரச்சனைகளையும் குறித்து அறியாதவர்கள் என்பதே. அதே போன்று, கடல் சார்ந்த அனுபவமும் அறிவும் இல்லாதவர்களாலும், மீனவரகள் மீது அக்கறை இல்லாதோராலும் இயற்றப்பட்ட மசோதாவும் மீனவனை பாதுகாக்காது. மாறாக இழப்பையும் இன்னல்களையுமே உருவாக்கும்.

1. கடலில் 12 நாட்டிக்கலுக்கு மேல் உரிமம் இன்றி மீன் பிடிக்க முடியாது. இது பாரம்பரிய மீன்பிடி தொழில் செய்யும் சிறு மீனவர்களைப் பெரிதும் பாதிக்கும்.



# கடலும் கடல் சார்ந்த நிலமும் மீனவனுக்கே!



2. 200 நாட்டிக்கல் தாண்டி ஆழ்கடலில் மீன்பிடிக்கும் நமக்கு இது பெரும் தடையாக அமையும். உரிமத்தை நிராகரிக்கவோ உரிமம் எடுத்தால்கூட அதை ஏதேனும் காரணம் கூறி உரிமத்தை திரும்பப் பெறவோ மத்திய அரசுக்கு அதிகாரத்தை இம்மசோதா கொடுத்துள்ளது.

3. ஏதாவதொரு விதிமுறையையேனும் மீறினால், என்பதைத் தாண்டி, தேசிய பாதுகாப்புக் கருதியோ, பொதுநலன் சார்ந்தோ உரிமத்தை ரத்து செய்ய இது வழிகோலுகிறது. இதன்படி ஒட்டுமொத்த படகுகளின் மீன்பிடித்தலை ரத்து செய்யவும் வழி உண்டு.

4. கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுககு அமைப்பு உருவாக்கப்படுமாம். இந்த அமைப்பால் நிச்சயம் பல்வேறு இடர்களை மீனவர்கள் சந்திக்க நேரிடுமாம்.

5. படகுகளில் ஆட்களை பணி அமர்த்துவது, காப்பீடு, என அனைத்தும் வணிகக் கப்பல் சட்டம் 1958ன்படி வரையறை செய்யப்படுமாம். சிறு படகைக்கூட வணிகக் கப்பல் சட்டத்துக்கு உட்படுத்துவது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல.

6. வெளிநாட்டுக் கப்பல்களுக்கு பெரிய கட்டுப்பாடுகள் எதுவுமில்லை. மாறாக பிற நோக்கங்கள் எனும் பெயரில் அவர்களுக்குச் சிறப்பு உரிமம் கொடுப்பதால் வெளிநாட்டுக் கப்பல்கள் அக்கடல் பகுதியில் ஆதிக்கம் செலுத்தும்.

7. பல்லுயிர்ப் பாதுகாப்பு என்கிற பெயரில் கடல் பகுதியில் மீன்பிடித்தலைத் தடை செய்யும் உரிமையை இம்மசோதா கொண்டுள்ளது. இதுவும் மீனவர்களுக்கு உளைச்சலை ஏற்படுத்தும்.

8. அலுவலர்களை நியமனம் செய்யவும் அவர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட தீர்வு கொண்டுவரவும் மசோதா வழிவகுக்கிறது. இதன் மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்ய வாய்ப்பு உண்டு.

9. தேசிய கடல் மீன்வள ஆணையம் நிறுவ அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இது அரசுக்குச் சாதகமாக செயல்பட்டு மீனவமக்களின் மீன்பிடி தொழிலில் தீங்கை உருவாக்க வழிவகுக்கும்.

10. சோதனையிடுதல் எனும் நிலையில் அரசு அதிகாரி வலிமையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். படகையும் பறிமுதல் செய்யலாம் எனும்போது அதிகாரிகள் அதை தங்களுக்குச் சாதகமாகவே பயன்படுத்தக்கூடும்.

விதிமுறைகளை மீறினால்? தண்டனை, அபராதம் என்றால் பரவாயில்லை. ஆனால், எந்தவொரு தண்டனையும் எந்தவொரு அபராதமும் விதிக்கப்படும் என்பது மிகக் கொடுமை. இலங்கை அரசு செய்யும் அட்டூழியங்கள் இனி நம் அரசால்கூட அரங்கேற்றப்படலாம் என்பது உறுதி.

மொத்தத்தில் கூட்டிக் கழித்துப் பார்த்தால் இம்மசோதா வெளிநாட்டுக் கப்பல்களுக்கு கடலை தாரைவார்க்கவும் மத்திய அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி கடல் வளத்தை பயன்படுத்தவும் உதவும்.

அதே வேளையில் மீனவ சமூகத்தை அடக்கி ஒடுக்கும் வகையிலும் கொண்டுவரப்படுவதே இம்மசோதாவின் நோக்கம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

கட்டுப்பாடு தேவையில்லையா என்றால், நிச்சயம் தேவைதான். ஆனால், கடலும் கடல்வளமும் சார்ந்த மசோதாவை மீனப் பிரதிநிதிகள், மீனவ சங்கத் தலைவர்கள் போன்றோருடன் கலந்தாலோசித்து சட்டம் இயற்றுவதே சிறந்ததாக இருக்கும். குறிப்பாக அவை மீனவர்களை நசுக்காமல் மீனவ நலன் சார்ந்ததாக அமைய வேண்டும்.

கடலும் கடல் சார்ந்த நிலமும் மீனவனுக்கே! எனவே, எம் மீனவ அன்பர்களே, அனைவரும் நமது உரிமைகளை, தொழிலைப் பாதுகாக்க வேண்டும்.

# கோவிட்-19 கொரோனா வைரஸ்

## அச்சத்தில் இருந்து விடுபட சில வழிகாட்டுதல்கள் :




கடந்த டிசம்பர் மாதம் சீனாவின் ஹூபேமா காணம், வூஹான் நகரில் முதன்முதலில் மக்களை பாதிக்கத் தொடங்கிய கோவிட்19 வைரஸ் உலகம் முழுவதும் 114 நாடுகளில் பரவி மக்களைப் பாதித்துள்ளது. கோவிட் 19 வைரஸ் பரவுவதை தடுக்க பதற்றம் அடையாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உலகசுகாதார மையம் உள்ளிட்ட சர்வதேச நிறு வனங்கள் அறிவுறுத்தி இருக்கின்றன.

**கோவிட்-19 வைரஸ் அச்சத்தில் இருந்து விடுபட சில வழிகாட்டுதல்கள் :**

கோவிட்19 வைரஸ் காய்ச்சல் தொற்று நோய் என்பதால் அது ஒரு நபரிடம் இருந்துமற்றவர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பரவக்கூடும்.

மூக்கு, தொண்டை, சுவாசக் குழாய் மற்றும் நுரையீரலை பாதிக்கும் தொற்று இது.

இந்த காய்ச்சல் 60 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் உடல் ஆரோக்கியம் குன்றியவர்களையே தீவிரமாகப் பாதிக்கிறது. குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் மிதமான தாக்கத்தையே ஏற்படுத்தக் கூடியது.

கோவிட்19 வைரஸால் பாதிக்கப்பட்டாலும் கவலை வேண்டாம். 80 சதவீதத்தினருக்கு மிதமான பாதிப்பு மட்டுமே இருக்கும். உரிய மருத்துவ சிகிச்சை மூலம் இரண்டு வாரங்களில் நீங்கள் குணமடைந்து விடலாம்.

கோவிட் 19 காய்ச்சல் உள்ளவர் தும்மி னாலோ, இருமினாலோ பரவும் நீர்த்துளி மற்றொருவரின் கண், நாசி, வாய் பகுதியில் பட்டால் காய்ச்சல் தொற்றும்.

காய்ச்சல் உள்ளவர்கள் பயன்படுத்தும் பொருட்களை மற்றவர்கள் தொடும்போது பரவும்.

உணவு வழியாக இந்த வைரஸ் பரவாது.

கோழி, முட்டை ஆகியவற்றை சாப்பிடுவதால் பரவாது.

சாதாரண வைரஸ் காய்ச்சலையும் கோவிட் 19 காய்ச்சலையும் இடையில் வேறுபடுத்துவது எப்படி என்ற குழப்பம் நிலவுகிறது. காய்ச்சல், இருமல், மூச்சுத் திணறல் ஆகியவை இருந்தாலோ, சீனா, ஈரான், இத்தாலி, கொரியா உள்ளிட்ட கோவிட் 19 வைரஸ் பரவி இருக்கும் நாடுகளுக்கு சமீபத்தில் பயணம் சென்றி ருந்தாலோ, கோவிட்19 காய்ச்சல் உள்ளவர்களுடன் இருந்தாலோ, கோவிட்19 வைரஸ் பாதிக்கப்பட்ட நோயாளிகள் சிகிச்சை எடுத்துக் கொள்ளும் மருத்துவ மனைக்கோ அல்லது மையத்துக்கோ சென்றிருந்தாலோ உங்களுக்கு வந்திருப்பது கோவிட்19 பாதிப்பாக இருக்கலாம்.

மிதமாக தாக்கும் பட்சத்தில் 2 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை கோவிட்19 வைரஸ் தாக்கம் நீடிக்கும். ஒருவேளை காய்ச்சல், சளி, தொண்டைக்கட்டு இருக்குமானால் பதற்றமடைய வேண்டாம். நாளொன்றுக்கு 23 முறை ஆவிபிடியுங்கள், சுத்தமான நீரை அடிக்கடி பருகுங்கள், அவ்வப்போது கைகளைச் சுத்தமாகக் கழுவுங்கள், காய்ச்சல் தீவிரமடைவதாகத் தெரிந்தால் மருத்துவரை அணுகுங்கள். மருத்துவரின் வழிகாட்டுதலின்படி முறையாக மருந்தை உட் கொள் ளுங்கள்.

ஒருவருக்கு கடும் காய்ச்சல் இருப்பதாலேயே அவருக்கு கோவிட்19 வைரஸ் தாக்கிவிட்டதாக முடிவுசெய்துவிடுவது தவறு. காய்ச்சல் வந்தவர்க் கெல்லாம் கோவிட்19 வைரஸ் சோதனை அவசிய மில்லை. அதை மருத்துவர்தான் தீர்மானிக்க வேண்டும்.

வைரஸ் பாதித்தாலும் அதிலிருந்து முழுவதுமாக குணமடைய முடியும். சிறப்பு சிகிச்சை ஏதுமின்றி இதிலிருந்து 80 சதவீதத்தினர் குணமடைந்து விட் டார்கள் என்பது நிரூபணமாகி உள்ளது.

கோவிட்19 வைரஸ் வராமல் தடுக்கும் நோய் தடுப்பூசி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும் நோய் தொற்று ஏற்பட்டவர்களில் 80 சதவீதத்தினர் பூரணமாகக் குணமடைந்து இருக்கி றார்கள்.

பூண்டு சாப்பிடுவதால் கோவிட்19 வைரஸை தடுக்க முடியும் என்பது பொய்.

வெயில் காலத்தில் கோவிட்19 வைரஸ் பரவாது என்பதற்கு அறிவியல் நிரூபணம் ஏதுமில்லை. இருப்பினும் வெப்பம் அதிகரித்தால் கோவிட்19 வைரஸ் பரவும் வேகம் குறையலாம் என்று கூறப்படுகிறது.

கோவிட்19 வைரஸால் பாதிக்கப்பட்டவரின் சளி, எச்சில் ஆகியன காகிதம், மரம், அட்டை, கண்ணாடி, பிளாஸ்டிக் பொருட்கள், இரும்பு ஆகிய பொருட் களின் மீது படிந்தால் 810 மணி நேரம் வரை கோவிட் 19 வைரஸ் வீரியம் குறையாமல் உயிருடன் இருக்கும். அப்பொருட்களைத் தொடுபவர்களுக்கு காய்ச்சல் தொற்றிக் கொள்ள அதிக வாய்ப்புள்ளது.

மூன்று அடுக்கு கொண்ட முகக் கவசத்தை கோவிட் 19 வைரஸ் காய்ச்சல் உடையவர்கள் அணிவது நல்லது.

**மூன்று இலக்குகள்**

உங்களை பாதுகாத்துக் கொள்வது எப்படி?

சோப்பு போட்டு நீரில் கைகளை நன்றாகக் கழுவுதல்.

சோப்பு, தண்ணீர் கிடைக்காதபோது சானிடைஸர் பயன்படுத்தி கைகளை சுத்தப்படுத்தி கொள்ளுதல்.

அழுக்கான கைகளால் கண், வாய், மூக்கு ஆகிய உறுப்புகளை தொடுவதை தவிர்த்தல் .

இருமல், தும்மல் இருப்பவர்களிடம் இருந்து ஒரு மீட்டர் தொலைவில் தள்ளி இருப்பது நல்லது.

கை குலுக்குவதற்கு பதில் கைகூப்பி வணக்கம் சொல்லுதல்.

உங்களுக்குப் பிரியமானவர்களை பாதுகாப்பது எப்படி?

இருமல், தும்மல் வரும் போது கட்டாயம் கைக்குட் டையை பயன்படுத்துதல்.

கூட்ட நெரிசலான இடங்களுக்கு செல்வதையும் வெளியூர் பயணங்களையும் தவிர்த்தல்.

நோய் தொற்று இருக்குமானால் கட்டாயம் முகக் கவசம் அணிதல்.

**உங்களுடைய சமூகத்தை பாதுகாப்பது எப்படி?**

காய்ச்சல் இருந்தால் மருத்துவரை அணுகுதல்.


காய்ச்சல், இருமல், மூச்சுத் திணறல் இருக்கு மானால் வீட்டை விட்டு வெளியேறாமல் மருத்துவரின் ஆலோசனைகளைப் பின்பற்றுதல்.

நமக்கு வரும் 'பார்வர்ட் மெசேஜ்'களையெல்லாம் கண்மூடித்தனமாக மற்றவர்களுக்கு பகிராமல் இருப்பது.

கூடுதல் விவரங்கள், ஆலோசனைகளுக்கு மத்திய சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் எண் : +91112397 8046 மற்றும் ncov2019@gmail.com என்ற மின்னஞ்சல் வழியாக 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

# கொரோனா வைரஸ்

## வீட்டுக்குள் வருவதைத் தடுக்க... நீங்கள் செய்ய வேண்டியவை!



தனி அறை முதல் கைக்குட்டைவரை... கொரோனாவுக்கு எதிராக வீட்டுக்குள் செய்ய வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள்!

கொரோனா நோய்த் தொற்று அதிகரித்துக் கொண்டே வருகின்றது. மக்கள் மத்தியில் இந்த நோய் குறித்த விழிப்புணர்வு இல்லாததால்தான் நோய்த் தொற்று அதிகரித்துக்கொண்டே வருகிறது என்கின்றனர் மருத்துவர்கள்.

மக்கள் கொரோனாவிடமிருந்து தங்கள் குடும்பத்தைத் தற்காத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பதை இந்தக் கட்டுரையில் நாம் விரிவாகப் பார்க்கலாம்.

வீட்டில் பெரியவர்களின் உடல்நலனில் கூடுதல் கவனம் கொள்ள வேண்டும்.

தரவுகளின்படி பார்க்கையில் கொரோனா நோய்க்குப் பலியானவர்களில் 80%க்கும் மேலானோர் வயதில் மூத்தவர்கள் என்பது தெரிகிறது. எனவே குடும்பத்தில் இருக்கும் பெரியவர்களின் உடல் நலனில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது மிக அவசியம். அவர்களின் உடல் நிலையைத் தொடர்ந்து கண்காணித்துக்கொண்டே இருக்க வேண்டும்.

கொரோனா நோய்க்கிருமி, வீட்டில் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். எனவே வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் மிக அவசியம். இந்த

நோய்க்கிருமி கதவுப் பிடிகள் மற்றும் வீட்டில் அடிக்கடி நாம் பயன்படுத்தும் பொருள்களிலிருந்து மற்றவருக்குப் பரவும். எனவே, அவற்றை கிருமி நாசினிகள் பயன்படுத்தி அடிக்கடி சுத்தம் செய்ய வேண்டும்.

**ஹேண்ட் சானிடைசர்**

கைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். வெளியிலிருந்து வீட்டிற்குள் வரும்போது நிச்சயமாகக் கைகால்களை நன்றாக சோப்புப் போட்டுக் கழுவ வேண்டும். இதன் மூலம் வெளியில் இருந்து வீட்டிற்கு வரும் நோய்த்தொற்றைத் தடுக்கலாம். மேலும் குறைந்தபட்சம் 20 நொடிகள் கைகளை நன்கு கழுவ வேண்டும். முக்கியமாக விரல் இடுக்குகளைச் சுத்தம் செய்தல் அவசியம். சோப்பு போடுவதும் நல்லதுதான். ஆனால், அதைவிட ஆல்கஹால் கொண்டு தயாரிக்கப் படும் கிருமி நாசினிகளைப் பயன்படுத்துவது இன்னும் நல்லது.

**கொரோனா** ( pixabay )

நோய்வாய்ப்பட்டவரை வீட்டில் தனி அறை கொடுத்து தனிமைப்படுத்த வேண்டும்.

குடும்பத்தில் நெருங்கிய உறவினருக்குத் நோய்த் தொற்று இருப்பது தெரிந்தால் அவரிடமிருந்து விலகி நிற்பது நல்லது. நோய் பாதிப்பு உடைய நபரை நன்கு சுத்தம் செய்யப்பட்ட சுகாதாரமான தனி அறையில் தங்கவைப்பது நல்லது. முதலில் அவரை தனிமைப் படுத்திவிட்டு பின் அடுத்த கட்ட மருத்துவ உதவிகளை நாடலாம். அந்த அறையில் அவருக்கென தனி கழிவறை இருப்பது சிறப்பு.

வேலைக்குச் செல்பவர்கள் வீட்டில் இருந்தே வேலை பார்க்க முயலவும்.

பெரும்பாலும் நிறுவனங்களில் பணிபுரிவோர் பல பகுதிகளில் இருந்து வந்தவர்களாக இருப்பார்கள். எனவே, அங்கு அவர்களோடு இணைந்து பணியாற்றும் போது ஒருவேளை அவர்களுக்கு நோய்த் தொற்று இருந்தால் அது மற்றவர்களுக்கும் பரவ வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. எனவே, வேலைக்குச் செல்வோர் முடிந்தவரை வீட்டில் இருந்தே தங்கள் அலுவலகப் பணிகளை மேற்கொள்ள முயலவும்.

**கைக்குட்டை**

வீட்டிற்குள் இருக்கும்போதும் கைக்குட்டை அவசியம்.

`தும்மல் கொரோனாவின் அறிகுறியா?!' சாதாரண சளிக் காய்ச்சலுக்கும் கொரோனாவுக்கும் உள்ள வேறுபாடுகள்

`தும்மல் கொரோனாவின் அறிகுறியா?!' சாதாரண சளிக் காய்ச்சலுக்கும் கொரோனாவுக்கும் உள்ள வேறுபாடுகள்

வீட்டிற்குள் இருந்தாலுமேகூட ஒருவர் இருமும் போது கைக்குட்டை கொண்டுதான் இரும வேண்டும். ஏனென்றால் இருமலின்போது நீர்த்துளிகள் மூலம் பரவும் கிருமி அருகில் உள்ள பொருள்களில் படிந்து மற்றவர்களுக்குப் பாதிப்பை உண்டாக்குகிறது. எனவே வீட்டிற்குள் இருமும்போதும் தும்மும் போதும் கண்டிப்பாக கைகுட்டைகள் பயன்படுத்த வேண்டும்.

**தூய்மை**

வீட்டின் உட்புறத் தூய்மையை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

வீட்டின் உட்புறத்தை அடிக்கடி தரை சுத்தம் செய்யும் மருந்துகள் கொண்டு சுத்தம் செய்து கொண்டே இருக்க வேண்டும். வீட்டின் உட்புறத்தை தூய்மையாக வைத்துக்கொள்வதன் மூலம் நோய்க் கிருமிகளை எளிதில் அழித்து பரவலைத் தடுக்கலாம்.

கொரோனா நோயின் தாக்கமும் பாதிப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வரும் நிலையில், இப்போதே மக்கள் பலரும் கொரோனாவுக்குப் பயந்து வீட்டுக்குள் முடங்கி இருக்கின்றனர். வெளியில் சென்றால் கொரோனா நோய் தாக்கிவிடும் என்று பயம்கொள்ளும் அவர்களுக்கு, வீட்டுக்குள் இருந்தாலும் கொரோனா தேடி வந்து தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது தெரிவதில்லை.

'வீட்டை சுத்தமாக வைத்துக்கொண்டு முகக் கவசங்கள் அணிந்துகொண்டு இருக்கும்போது எப்படி தாக்கும்?' என்ற கேள்வி உங்கள் மனதில் எழும். நம்மை வீடுதேடி வருபவர்கள் வாயிலாக இந்த நோய் பரவுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

அடுத்ததாக, வீட்டுக்குள் தனிமைப்படுத்திக் கொள் வதன் முக்கிய நடவடிக்கை, உணவுப் பொருள்கள் இருப்பை உறுதிசெய்து கொள்வது. ஆனால் இந்த நேரத்தில் சமையல் பொருள்கள் வாங்கக்கூட வெளியில் செல்லாமல் மக்கள் இணையதளங்களின் வாயிலாக உணவுப் பொருள்களை ஆர்டர் செய்து பெற்று சாப்பிட்டு வருகின்றனர். உணவு வெளியில் இருந்து வருவதால், அது சுகாதாரமான முறையில் சமைக்கப் பட்டதா என்பது நமக்குத் தெரிய வாய்ப்பில்லை.

மேலும் அதை டெலிவரி செய்யும் நபரால் கூட நமக்கு நோய்த்தொற்றிக்கொள்ள வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. அதனால் முடிந்தவரை குடும்பத் தின் உடல் நலம் கருதி வெளியில் இருந்து உணவு வாங்கி உண்ணுவதை அவசியம் தவிர்க்க வேண்டும். வீட்டிலேயே சுத்தமான, சுகாதாரமான முறையில் சமைத்து உண்பதற்கு முயல வேண்டும். ●

# தமிழ்ப்புலவர்கள்

வள்ளுவர்
ஔவை
கம்பர்
அகம்பன் மாலாதனார்
அஞ்சியத்தை மகள்
நாகையார்
அஞ்சில் அஞ்சியார்
அஞ்சில் ஆந்தையார்
அடைநெடுங்கல்வியார்
அணிலாடு முன்றிலார்
அண்டர் மகன்
குறுவழுதியார்
அதியன் விண்ணத்தனார்
அதி இளங்கீரனார்
அம்மூவனார்
அம்மெய்நாகனார்
அரிசில் கிழார்
அல்லங்கீரனார்
அழிசி நச்சாத்தனார்
அள்ளூர்
நன்முல்லையார்
அறிவுடைநம்பி
ஆடுதுறை மாசாத்தனார்
ஆதிமந்தி
ஆர்க்காடு கிழார் மகனார்
வெள்ளைக்கண்ணத்தனார்
ஆலங்குடி வங்கனார்
ஆலத்தூர் கிழார்
ஆலம்பேரி சாத்தனார்
ஆவூர்கிழார் மகனார்
கண்ணனார்
ஆவூர் காவிதிகள்
சகாதேவனார்
ஆவூர்கிழார்
ஆலியார்
ஆவூர் மூலங்கீரனார்
இடைக்கழிநாட்டு நல்லூர்
நத்தத்தனார்
இடைக்காடனார்
இடைக்குன்றூர்க்கிழார்
இடையன் சேந்தன்
கொற்றனார்
இடையன் நெடுங்கீரனார்
இம்மென்கீரனார்
இரணியமுட்டத்து
பெருங்குன்றூர்ப்
பெருங்கௌசிகனார்
இருங்கோன் ஒல்லையன்
செங்கண்ணனார்
இருந்தையூர்க்கொற்றன்
புலவன்
இரும்பிடர்தலையார்
இளங்கீரந்தையார்
இளங்கீரனார்
இளநாகனார்
இளந்திரையன்
இளந்தேவனார்
இளம்புல்லூர்க் காவிதி
இளம்பூதனார்
இளம்போதியார்
இளவெயினனார்
இறங்குடிக்குன்றநாடன்
இறையனார்
இனிசந்த நாகனார்
ஈழத்துப் பூதந்தேவனார்
உகாய்க் குடிகிழார்
உக்கிரப் பெருவழுதி
உமட்டூர் கிழார் மகனார்
பரங்கொற்றனார்
உம்பற்காட்டு
இளங்கண்ணனார்
உருத்திரனார்
உலோச்சனார்
உவர்கண்ணூர்
புல்லங்கீரனார்
உழுந்தினைம் புலவர்
உறையனார்
உறையூர் இளம்பொன்
வாணிகனார்
உறையூர் ஏணிச்சேரி
முடமோசியார்
உறையூர்க் கதுவாய்ச்
சாத்தனார்
உறையூர்ச் சல்லியங்
குமரனார்
உறையூர்ச் சிறுகந்தனார்
உறையூர்ப் பல்காயனார்
உறையூர் மருத்துவதன்
தாமோதரனார்
உறையூர் முதுகண்ணன்
சாத்தனார்
ஊட்டியார்
ஊண்பித்தை
ஊண்பொதி பசுங்குடையார்
எயிற்றியனார்
எயினந்தையார்
எருமை வெளியனார்
எருமை வெளியனார்
மகனார் கடலனார்
எழுப்பன்றி நாகன்
குமரனார்
ஐயாதி சிறு வெண்ரையார்
ஐயூர் முடவனார்
ஐயூர் மாசாத்தனார்
ஒருசிறைப் பெரியனார்
ஒரூத்தனார்
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
ஓதஞானி
ஓதலாந்தையார்
ஓரம்போகியார்
ஓரிற்பிச்சையார்
ஓரேர் உழவர்
கங்குல் வெள்ளத்தார்
கச்சிப்பேடு இளந்தச்சன்
கச்சிப்பேடு காஞ்சிக்கொற்றனார்
கச்சிப்பேடு பெருந்தச்சனார்
கடம்பனூர்ச் சாண்டில்யன்
கடலூர்ப் பல்கண்ணனார்
கடியலூர் உருத்திரங்கண்ணனார்
கடுந்தொடைக் காவினார்
கோவர்த்தனர்
கோவூர்க்கிழார்
கோவேங்கைப் பெருங்கதவனார்
கோழிக் கொற்றனார்
கோளியூர்க் கிழார் மகனார் செழியனார்
கோனாட்டு எறிச்சலூர் மாடலன்
மதுரைக்குமரன்
சங்கவருணர் என்னும் நாகரியர்
சத்திநாதனார்
சல்லியங்குமரனார்
சாகலாசனார்
சாத்தந்ததையார்
சாத்தனார்
சிறுமோலிகனார்
சிறுவெண்டேரையார்
சிறைக்குடி ஆந்தையார்
சீத்தலைச் சாத்தனார்
செங்கண்ணனார்
செம்பியனார்
செம்புலப்பெயர்நீரார்
செயலூர் இளம்பொன்சாத்தன்
கொற்றனார்
செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன்
செல்லூர்கிழார் மகனார் பெரும்புதன்
கொற்றனார்
செல்லூர்க்கோசிகன் கண்ணனார்
சேந்தங்கண்ணனார்
சேந்தம்பூதனார்
சேந்தங்கீரனார்
சேரமானெந்தை

சேரமான் இளங்குட்டுவன்
சேரமான் கணைக்கால்
இரும்பொறை
சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய
மாகோதை
சோனாட்டு முகையலூர்ச்
சிறுகருந்தும்பியார்சோழன்
குளமுற்றத்துத் துஞ்சிய
கிள்ளிவளவன்
சோழன் நலங்கிள்ளி
சோழன் நல்லுருத்திரன்
தங்கால் ஆத்திரேயன்
செங்கண்ணனார்
தங்கால் பொற்கொல்லன்
வெண்ணாகனார்
தனிமகனார்
தாமாப்பல் கண்ணனார்
தாமோதரனார்
தாயங்கண்ணனார்
தாயங்கண்ணியார்
திப்புத்தோளார்
திருத்தாமனார்
தீன்மதிநாகனார்
தும்பிசேர்கீரனார்
துறைக்குறுமாவிற்
பாலங்கொற்றனார்
துறையூர்ஓடைக்கிழார்
தூங்கலோரியார்
தேய்புரி பழங்கயிற்றினார்
தேரதரன்
தேவகுலத்தார்
தொடித்தலை விழுத்தண்டினார்
தொண்டி ஆமூர்ச்சாத்தனார்
தொல்கபிலர்
நக்கண்ணையார்
நக்கீரர்
நப்பசலையார்
நப்பண்ணனார்
நப்பாலத்தனார்
நம்பிகுட்டுவன்
நரிவெரூத்தலையார்
நரைமுடி நெட்டையார்
நல்லச்சதனார்
நல்லந்துவனார்
நல்லழிசியார்
நல்லாவூர்க்கிழார்
நல்லிறையனார்
நல்லுருத்திரனார்
நல்லூர்ச்சிறுமேதாவியார்
நல்லெழுநியார்
நல்வழுதியார்
நல்விளக்கனார்
நல்வெள்ளியார்
நல்வேட்டனார்
நற்சேந்தனார்
நற்றங்கொற்றனார்
நற்றமனார்
நன்பலூர்ச் சிறுமேதாவியார்
நன்னாகனார்
நன்னாகையார்
நாகம்போத்தன்
நாமலார் மகன் இளங்கண்ணன்
நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார்
நெடுங்கழுத்துப் பரணர்
நெடும்பல்லியத்தனார்
நெடும்பல்லியத்தை
நெடுவெண்ணிலவினார்
நெட்டிமையார்
நெய்தந் கார்க்கியார்
நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர்க்கிழார்
நெய்தற்றத்தனார்
நொச்சி நியமங்கிழார்
நோய்பாடியார்
பக்குடக்கை நண்பணியார்
படுமரத்து மோசிகீரனார்
படுமரத்து மோசிக்கொற்றனார்
பதடிவைகலார்
பதுமனார்
பரணர்
கடுந்தொடைக் கரவீரன்
கடுவன் இளமள்ளனார்
கடுவன் இளவெளினனார்
கடுவன் மள்ளனார்
கணக்காயன் தத்தனார்
கணியன் பூங்குன்றனார்
கண்ணகனார்
கண்ணகாரன் கொற்றனார்
கண்ணங்கொற்றனார்
கண்ணம் புல்லனார்
கண்ணனார்
கதக்கண்ணனார்
கதப்பிள்ளையார்
கந்தரத்தனார்
கபிலர்
கயத்தூர்கிழார்
கயமனார்
கருங்குழலாதனார்
கரும்பிள்ளைப் பூதனார்
கருவூர்க்கிழார்
கருவூர் கண்ணம்பாளனார்
கருவூர் கதப்பிள்ளைச் சாத்தனார்
கருவூர் கலிங்கத்தார்
கருவூர் கோசனார்
கருவூர் சேரமான் சாத்தன்
கருவூர் நன்மார்பனார்
கருவூர் பவுத்திரனார்
கருவூர் பூதஞ்சாத்தனார்
கருவூர் பெருஞ்சதுக்கத்துப் பூதனார்
கல்பொருசிறுநுரையார்
கல்லாடனார்
கவைமகன்
கழாத்தலையார்
கழார்க் கீரனெயிற்றியார்
கழைதின் யானையார்
கள்ளிக்குடிப்பூதம்புல்லனார்
கள்ளில் ஆத்திரையனார்
காக்கைப்பாடினடியார்
நச்செள்ளையார்
காசிபன் கீரன்
காட்டூர்கிழார் மகனார் கண்ணனார்
காப்பியஞ்சேந்தனார்
காப்பியாற்றுக் காப்பியனார்
காமஞ்சேர் குளத்தார்
காரிக்கிழார்
காலெறி கடிகையார்
காவட்டனார்
காவற்பெண்டு
காவன்முல்லையார்
காவிரிப் பூம்பட்டினத்துக்
கந்தரத்தனார்
காவிரிப் பூம்பட்டினத்துக்
காரிக்கண்ணனார்
காவிரிப் பூம்பட்டினத்துச்
செங்கண்ணனார்
காவிரிப் பூம்பட்டினத்துச் சேந்தன்
கண்ணனார்
காவிரிப் பூம்பட்டினத்துப்
பொன்வாணிகனார் மகனார்
நப்பூதனார்
கிடங்கில் காவிதிக் கீரங்கண்ணனார்
கிடங்கில் குலபதி நக்கண்ணனார்
கிள்ளிமங்கலங்கிழார்
கிள்ளிமங்கலங்கிழார் மகனார்
சேரக்கோவனார்
கீரங்கீரனார்
கீரந்தையார்
குடபுலவியனார்
குடவாயிற் கீர்த்தனார்
குட்டுவன் கண்ணனார்
குட்டுவன் கீரனார்
குண்டுகட் பாலியாதனார்
குதிரைத் தறியனார்
குப்பைக் கோழியார்
குமட்டூர் கண்ணனார்
குமுழிஞாழலார் நப்பசலையார்
குழற்றத்தனார்
குளம்பனார்
குளம்பாதாயனார்
குறமகள் இளவெயினி
குறமகள் குறியெயினி
குறியிறையார்
குறுங்கீரனார்

குறுங்குடி மருதனார்
குறுங்கோழியூர் கிழார்
குன்றம் பூதனார்
குன்றியனார்
குன்றூர்க் கிழார் மகனார்
கூகைக் கோழியார்
கூடலூர்க் கிழார்
கூடலூர்ப் பல்கண்ணனார்
கூவண்மைந்தன்
கூற்றங்குமரனார்
கேசவனார்
கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனர்
கொட்டம்பலவனார்
கொல்லன் அழிசி
கொல்லிக்கண்ணன்
கொள்ளம்பக்கனார்
கொற்றங்கொற்றனார்
கோக்குளமுற்றனார்
கோடைபாடிய பெரும்பூதன்
கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்
கோட்டியூர் நல்லந்தையார்
கோண்மா நெடுங்கோட்டனார்
கோப்பெருஞ்சோழன்
பராயனார்
பரூஉமோவாய்ப் பதுமனார்
புறநாட்டுப் பெருங்கொற்றனார்
பனம்பாரனார்
பாண்டரங்கண்ணனார்
பாண்டியன் ஆரியப்படைகடந்த
நெடுஞ்செழியன்
பாண்டியன் ஏனாதி நெடுஞ்கண்ணனார்
பாண்டியன் தலையாலங்கானத்துச்
செருவென்ற நெடுஞ்செழியன்
பாண்டியன் பன்னாடு தந்தான்
பாண்டியன் மாறன் வழுதி
பாரதம் பாடிய பெருந்தேவனார்
பாரிமகளிர்
பார்காப்பான்
பாலைக்கௌதமனார்
பாலை பாடிய பெருங்கடுங்கோ
பாவைக் கொட்டிலார்
பிசிராந்தையார்
பிரமசாரி
பிரமனார்
பரிான் சாத்தனார்
புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழார்
புல்லாற்றூர் எயிற்றியனார்
பூங்கணுத்திரையார்
பூங்கண்ணன்
பூதங்கண்ணனார்
பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு
பூதம்புல்லனார்
பூதனார்
பூதந்தேவனார்

குறுங்கோழியூர் கிழாகுறுங்கோழியூர்
கிழார்
குன்றம் பூதனார்
குன்றியனார்
குன்றூர்க்கிழார் மகனார்
கூகைக் கோழியார்
கூடலூர்க் கிழார்
கூடலூர்ப் பல்கண்ணனார்
கூவன்மைந்தன்
கூற்றங்குமரனார்
கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்
கொட்டம்பலவனார்
கொல்லன் அழிசி
கொள்ளம்பக்கனார்
கொற்றங்கொற்றனார்
கோக்குளமுற்றனார்
கோடைபாடிய பெரும்பூதன்
கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்
கோட்டியூர் நல்லந்தையார்
கோண்மா நெடுங்கோட்டனார்
கோப்பெருஞ்சோழன்
பாலை பாடிய பெருங்கடுங்கோ
பாவைக் கொட்டிலார்
பிசிராந்தையார்
பிரான் சாத்தனார்
புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழார்
பல்லாற்றூர் எயிற்றியனார்
பூங்கணுத் திரையார்
பூங்கண்ணன்
பூதங்கண்ணனார்
பூதபாண்டிய தேவி பெருங்கோப்பெண்டு
பூதம்புல்லனார்
பூதனார்
பூதந்தேவனார்
பெருங்கண்ணனார்
பெருங்குன்றூர்க் கிழார்
பெருங்கௌசிகனார்
பெருஞ்சாத்தனார்
பெருஞ்சித்திரனார்
பெருந்தலைச் சாத்தனார்
பெருந்தேவனார்
பெருந்தோட் குறுஞ்சாத்தன்
பெரும் பதுமனார்
பெரும்பாக்கன்
பெருவழுதி
பேயனார்
பேய்மகள் இளவெயினி
பேராலவாயர்
பெரிசாத்தனார்
பேரெயின்முறுவலார்
பொதுக்கயத்துக் கீரந்தை
பொதும்பில் கிழார்
பொதும்பில் கிழார் மகனார்
வெண்கண்ணி

பொதும்பிற் புல்லாளல்
கண்ணியார்
பொத்தியார்
பொய்கையார்
பொருந்தில் இளங்கீரனார்
பொன்மணியார்
பொன்முடியார்
பொன்னாகன்
போதனார்
போந்தைப் பசலையார்
மடல் பாடிய மாதங்கீரனார்
மதுரை அளக்கர் ஞாழற்
கவிஞர் மகனார் மள்ளனார்
மதுரை அறுவை வாணிகன்
இளவேட்டனார்
மதுரை ஆசிரியர்
கோடங்கொற்றனார்
மதுரை இளங்கண்ணிக்
கௌசிகனார்
மதுரை இளங்கௌசிகனார்
மதுரை இளம்பாலாசிரியன்
சேந்தன் கூத்தனார்
மதுரை ஓலைக்கடைக்
கண்ணம்
புகுந்தாராயத்தனார்
மதுரை ஓலைக்கடையத்தார்
நல்வெள்ளையார்
மதுரைக் கடையத்தார்
மகன் வெண்ணாகனார்
மதுரைக் கணக்காயனார்
மதுரைக் கண்டராதித்தனார்
மதுரைக் கண்ணத்தனார்
மதுரைக் கவுணியன்
பூதத்தனார்
மதுரைக் கள்ளிற்
கடையத்தன்
வெண்ணாகனார்
மதுரைக் காமக்கணி
நப்பாலத்தனார்
மதுரைக் காருலவியங்
கூத்தனார்
மதுரைக் கூத்தனார்
மதுரைக் கொல்லன்
புல்லன்
மதுரைக் கொல்லன்
வெண்ணாகனார்
மதுரைச் சுள்ளம் போதனார்
மதுரைத்
தத்தங்கண்ணனார்
மதுரைத் தமிழகக்கூத்தனார்
நாகன் தேவனார்
மதுரைத் தமிழக் கூத்தனார்
மதுரைப் படைமங்க
மன்னியார்

மதுரைப் பாலாசிரியர்
சேந்தங்கொற்றனார்
மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்
மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார்
மதுரைப் புல்லங்கண்ணனார்
மதுரைப் பூதனிள நாகனார்
மதுரைப் பூவண்ட நாகன் வேட்டனார்
மதுரைப் பெருங்கொல்லன்
மதுரைப் பெருமருதனார்
மதுரைப் பெருமருதிளநாகனார்
மதுரைப் போத்தனார்
மதுரை மருதங்கிழார் மகனார்
சொகுத்தனார்
மதுரை மருதங்கிழார் மகனார்
பெருங்கண்ணனார்
மதுரை மருதங்கிழார் மகன்
இளம்போத்தன்
மதுரை வேளாசன்
மருங்கூர்க் கிழார் பெருங்கண்ணனார்
மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன்
குமரனார்
மருங்கூர்ப் பாகை சாத்தன் பூதனார்
மருதம் பாடிய இளங்கடுங்கோ
மருதனிளநாகனார்
மலையனார்
மள்ளனார்
மாங்குடி மருதனார்
மாடலூர் கிழார்
மாதீர்த்தன்
மாமிலாடன்
மாமூலனார்
மாயேண்டன்
மார்க்கண்டேயனார்
மாலைமாறன்
மாவளத்தன்
மாறோக்கத்துக் காமக்கண்ணியார்
மாறோக்கத்து நப்பசலையார்
மாற்பித்தியார்
மிளைக் கந்தன்
மிளைப் பெருங்கந்தன்
மிளைவேள் பித்தன்
மீனெறி தூண்டிலார்
முக்கல் ஆசான் நல்வெள்ளையார்
முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்
முடத்தாமக்கண்ணியார்
முடத்திருமாறன்
முதுகூத்தனார்
முதுவெங்கண்ணனார்
முப்பேர் நாகனார்
முரஞ்சியயூர் முடிநாகராயர்
முள்ளியூர்ப் பூதியார்
மூலங்கீரனார்
மையோடக் கோவனார்
மோசிக்கண்ணத்தனார்
மோசிக்கீரனார்
மோசிக் கொற்றன்
மோசிக்கரையனார்
மோசிசாத்தனார்
மோசிதாசனார்
வடநெடுந்தத்தனார்
வடவண்ணக்கன் தாமோதரன்
வடமாதங்கிழார்
வருமுலையாரித்தி
வன்பரணர்
வண்ணக்கன் சோருமருங்குமரனார்
வண்ணப்புறக் கந்தரத்தனார்
வாடாபிராந்தன்
வாயிலான் தேவன்
வாயிலிலங்கண்ணன்
வான்மீகியார்
விட்டகுதிரையார்
விரிச்சியூர் நன்னாகனார்
விரியூர் நன்னாகனார்
வில்லக விரலினார்
விழிகட்பேதை பெருங்கண்ணனார்
விற்றூற்று மூதெயினனார்
விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்
வினைத் தொழில் சோகீரனார்
வீரை வெளியனார்
வீரை வெளியன் தித்தனார்
வெண்கண்ணனார்
வெண்கொற்றன்
வெண்ணிக் குயத்தியார்
வெண்பூதன்
வெண்பூதியார்
வெண்மணிப்பூதி
வெளிளாடியனார்
வெள்ளியந்தின்னனார்
வெள்ளிவீதியார்
வெள்வெருக்கிலையார்
வெள்ளைக்குடி நாகனார்
வெள்ளைமாளர்
வெளிபாடிய காமக்கண்ணியார்
வேட்டகண்ணன்
வேம்பற்றூர்க்கண்ணன் கூத்தன்
வேம்பற்றுக் குமரன்


## பெண்பாற்புலவர்கள்...

அச்சியத்தை மகள் நாகையார்
அள்ளூரர் நன்முல்லை
ஆதிமந்தி
இளவெயினி
உப்பை உறுவை
ஒக்கூர் மாசாத்தியார்
கரீனா கண்கணையார்
கவியரசி
கழார் சீரன் எயிற்றியார்
கள்ளில் ஆத்திரையனார்
காக்கை பாடினியார் நச்செள்ளையார்
காமக்கணிப் பசலையார்
காரைக்காலம்மையார்
காவற்பெண்ட
கிழார் கீரனெயிற்றியார்
குட புலவியானார்
குமிழிநாழல் நாப்பசலையார்
குமிழி ஞாழல் நப்பசையார்
குறமகள் இளவெயினி
குறமகள் குறிஎயினி
குறமகள் இளவெயினியார்
கூகைக்கோழியார்
தமிழறியும் பெருமாள்
தாங்கண்ணி
நக்கண்ணையார்
நல்லிசைப் புலமை மெல்லியார்
நல்வெள்ளியார்
நெட்டிமையார்
நெடும்பல்லியத்தை
சலையார்
பாரிமகளிர்
பூங்கண்ணுத்திரையார்
பூங்கண் உத்திரையார்
பூதபாண்டியன் தேவியார்
பெண்மணிப் புதியார்
பெருங்கோப்பெண்டு
பேய்மகள் இளவெயினி
பேயனார்
பேரெயென் முறுவலார்
பொத்தியார்
பொன்மணியார்
பொன்முடியார்
போந்தலைப் பசலையார்
மதுவேலைக் கடையத்தார்
மாற்பித்தியார்
மாற்பித்தியார், இயற்பெயர் பித்தி
மாறோக்கத்து நாப்பசலையார்
முள்ளியூர் பூதியார்
முன்னியூப் பூதியார்
வருமுலையாருத்தி
வில்லிபுத்துர்க் கோதையார்
வெண்ணிக் குயத்தியார்
வெள்ளி வீதியார்
வெளிபாடிய காமக்கண்ணியார்

Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5 Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 Weavers Street Triplicane, Chennai-5, Editor: **V. THALAPATHI.**



நடிகரும் திருவாடானை சட்டமன்ற உறுப்பினருமான
திரு. கருணாஸ் அவர்களது பிறந்தநாளில்
கவிஞர் திரு. கவிபாஸ்கர் அவர்களும்
முற்றம் இதழாசிரியர் விசவனூர் வே. தளபதி
அவர்களும் வாழ்த்துக் கூறினர்.




முற்றம் ஆசிரியர் அவர்களின் பிறந்தநாளில்
இதழின் துணைத்தலைவர் திரு. இராஜாசிங் அவர்களும்
செய்தியாளர் சைதைமணிமாறன் அவர்களும்
வாழ்த்துத் தெரிவித்தனர்.



தமிழகத்தின் தலை சிறந்த ஓவியர் திரு. புகழேந்தி அவர்கள், திரைப்பின்னணிப்பாடகர் திரு. உன்னி மேனன்
ஆகியோருடன் முற்றம் ஆசிரியர்.

MUTRAM - Tamil & English Monthly RNI No. TNBIL/2010/36924.



# புனித நீர்!

பெ.மணியரசன்
தலைவர், தமிழ்த்தேசியப் பேரியக்கம்

**வா**ழ்ந்து கெட்ட நாடு
எங்கள்
வாழவந்தான் நாடு!

இங்கு இப்போது
அசலுக்கு மதிப்பில்லை!
போலிகள் மட்டுமே
புகழப்படுகின்றன!
மயில்களுக்கு மதிப்பில்லை
வான்கோழிகள் மட்டுமே
வர்ணிக்கப்படுகின்றன!

உண்மையான
உழவனுக்கு வாழ்வில்லை!
நாடகத்தில்
உழவன் வேடமிட்டவர்
நாயகராய் வலம் வருவார்!

பெற்ற தாய்க்கு
மதிப்பில்லை
பிழைக்க வந்த
பெண்ணுக்குப்
பெருந்தாய்ப் பட்டங்கள்!

பிச்சையெடுக்க வந்த
புதிய சாமியார்
இவற்றைப் புரிந்து கொண்டார்!

"நான் வரம் தந்தால்
நாடே செழிக்கும்"
என்றார்!

"வரம் தர வாருங்கள்,
வரம் தர வாருங்கள்" என்று
புதிய சாமியாரின்
புது மடத்தில்
அன்றாடம்
ஆயிரக்கணக்கானோர்
அழைப்பு அர்ச்சனை
செய்தனர்!

ஒரு நாள்,
வாயிலைத் திறந்து
வெளியே வந்தார்:

"வரம் தருவேன்
ஆனால் தரமாட்டேன்"என்று
வாய் அமுதம் சிந்திவிட்டு
உள்ளே போய்
உள்தாழ்ப்பாள் போட்டுக் கொண்டார்

போலிச் சாமியாரின் இந்தப்
புதிய தத்துவத்தை ஆராய
அரசியல் தலைவர்கள்
ஆய்வு மேதைகள்
தொலைக்காட்சி
சூத்திரதாரிகள்
எல்லோரும்
மடத்தின்முன் சூழ்ந்தனர்!
சூடு பறந்தது விவாதத்தில்!

எல்லாவற்றையும்
எங்கள் ஊர்
கீழத்தெரு
கிறுக்குப்பெண் கவனித்தாள்
"அடச் சீ" என்று
காரித் துப்பி அகன்றாள்!
அத்தனை பேர் முகத்திலும்
புனித நீர்!